# 2013

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# Annual Report

ශ්‍රී ලංකා රාජ්‍ය ඖෂධ නිෂ්පාදන සංස්ථාව

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

State Pharmaceuticals Manufacturing Corporation of Sri Lanka







## සමරු ඵලකයේ සටහන

අත්‍යවශ්‍ය ඖෂධ නිපදවීම සඳහා වූ මෙම ඖෂධ සංයෝග මධ්‍යස්ථානය
ශ්‍රී ලංකා - ජපාන මිත්‍රත්වයේ සංකේතයක් ලෙසින්
ජපන් රජය විසින් ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය වෙත කරන ලද
පරිත්‍යාගයකි.
1987

## நுழைவாயிலில் இருக்கும் பதக்கப் பலகை

இம் முக்கியமான மருந்துகள் தயாரிக்கும் மருந்தாக்கல் கலவைகள் நிலையம் யப்பான்
நாட்டிற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும்
இடையே இருக்கும் நட்புறவு மற்றும் ஒருமைப்பாட்டின் அடையாளமாக
யப்பான் நாட்டினால்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு வழங்கப்பட்ட நன்கொடையாகும்.
1987

## Plaque at the entrance

This Pharmaceuticals Formulation Centre for the essential drugs is an outright gift by the
Government of Japan to the Democratic Socialist Republic of Sri Lanka as a
token of friendship and co-operation between Japan & the
Democratic Socialist Republic of Sri Lanka.
1987

# வருடாந்த அறிக்கை - 2013

இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

# எமது சமூகப் பொறுப்பு

தனது சமூகப் பொறுப்பை உணர்ந்த அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக்கூட்டுத்தாபனம் அதனை வெற்றிகரமான விதத்தில் நிறைவேற்றி வருகின்றது.

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொறித்தொகுதி அதன் தூய்மையான சுற்றாடலில் நவீன ஜப்பானிய, ஜேர்மன் மற்றும் கொரிய இயந்திரங்களைக் கொண்டுள்ளது.





## பாடசாலை கட்டடிடம் ஒன்றை நன்கொடையாக வழங்குதல்

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், எந்தவொரு தனி ஆளினதும் வெற்றிக்கான மூலம் கல்வியே என நம்பும் அதன் கொள்கையை உண்மைப்படுத்தும் வகையில், சமூகத்தில் உள்ள வசதிகள் குறைந்த பாடசாலைச் சிறுவர்களை மனதில் கொண்டு சமூக ரீதியான பொறுப்பை நிறைவேற்றும் மேலதிகப் பணி ஒன்றில் ஈடுபட்டது. எனவே, அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், கல்வி உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் ஒரு பகுதியாக, 2013ஆம் ஆண்டில் களுத்துறையில் உள்ள ஹிரிகல்கொடல்ல ஆரம்பப் பாடசாலைக்கு ஒரு கட்டிடத்துடன் தேனீர்ச்சாலை ஒன்றையும் நிர்மாணித்து அன்பளிப்புச் செய்தது.

## பாடசாலை மாணவர்களுக்கு சப்பாத்துகளையும் புத்தகங்களையும் அன்பளிப்புச் செய்தல்

“கல்வி ஒரு மக்கள் குழுவை வழிகாட்டுவதற்கு இலகுவானதாகவும் ஆனால் செலுத்துவதற்கு சிரமமானதாகவும் ஆளுவதற்கு இலகுவானதாகவும் ஆனால் அடிமைப்படுத்துவதற்கு முடியாததாகவும் ஆக்குகின்றது.”

- பீற்றர் புரோகாம் -

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் CSR செயற்பாடுகளைப் பரப்புவதற்கும் இலங்கையில் உள்ள பின்தங்கிய கிராமங்களிலும் நகரங்களிலும் ஊடுருவி எமது சேவைகளை மேற்கொள்வதற்கும் நாம் குறிப்பாக எமது செயற்பாடுகளை பாடசாலைகளில் ஒருங்கிணைத்தோம். அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் மதவாச்சியில் உள்ள மதவாச்சி மகா வித்தியாலயம், பொலனறுவையில் உள்ள அத்தனகடவெல மகாவித்தியாலயம் மற்றும் இரத்மலானையில் உள்ள கடவெல வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளையும், பாடசாலை நூலகத்துக்கான புத்தகங்களையும் சப்பாத்துகளையும் அன்பளிப்புச் செய்வதற்கு முடிந்தது.






## சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டம் - தெஹியத்தகண்டிய

எமது கூட்டுத்தாபனம் தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளின் கண்காட்சிக் கூடம் ஒன்றை ஒழுங்கு செய்து பொதுமக்கள் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பெறுவதற்கு ஆதரவளித்தது. இந்தக் கண்காட்சி பொது சுகாதார கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஐந்து நாட்கள் நடைபெற்றது.



## எமது தரக்கட்டுப்பாடு

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை உற்பத்தி நடவடிக்கைகளுக்கு முன்னரும் முடிவுப் பொருட்களை உற்பத்தியின் பின்னரும் அதன் நவீன கருவிகளைக் கொண்ட ஆய்வு கூடத்தில் தரக் கட்டுப்பாட்டு பரிசோதனைகளை மேற்கொள்கின்றது.



## உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களைப் பொதியிடல்

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் மருந்துப் பொருட்கள் நவீன பொதியிடல் இயந்திரங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பாக பொதியிடப்படுகின்றன.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| எமது நோக்கும் பணியும் | - | 70 |
| கூட்டிணை நிறுவனத் தகவல்கள் | - | 71 |
| அ.ம.உ.கூ. தாபிக்கப்பட்டமையும் பிரதான குறிக்கோள்களும் | - | 72 |
| தலைவரின் மீளாய்வு | - | 73 |
| பணிப்பாளர்கள் | - | 76 |
| பணிப்பாளர்களின் அறிக்கைகள் | - | 79 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | - | 81 |
| கூட்டிணை நிறுவன ஆளுகை அறிக்கை | - | 82 |
| எமது உற்பத்திக் கலவைகள் | - | 84 |
| பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று | - | 85 |
| நிதியியல் நிலைமை பற்றிய கூற்று | - | 86 |
| வருமானக் கூற்று | - | 87 |
| உரிமைப்பங்கில் மாற்றம் பற்றிய குறிப்பு | - | 88 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | - | 89 |
| நிறுவனத் தகவல்களும் கணக்கீட்டுக் கொள்கைகளும் | - | 91 |
| கணக்குகளுக்கான குறிப்பு | - | 99 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | - | 113 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய தலைவரின் கருத்துக்கள் | - | 127 |
| வரைபட மீள்நோக்கு | - | 130 |
| கடந்த 10 ஆண்டுகளின் நிதி தொடர்பான முக்கிய தகவல்கள் | - | 133 |



# எமது நோக்கு

தெற்காசியாவில் மருந்தாக்கல் மற்றும் சுகாதார பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மாதிரி நிறுவனமாகத் திகழ்தல்

# எமது பணி

சர்வதேச தரத்திலான உயர்ந்த ரக பாதுகாப்பானதும் பயனுறுதியானதும் விலை குறைவானதுமாக மருந்துப் பொருட்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்காக உற்பத்தி செய்தல்

# கூட்டிணைவுத் தகவல்கள்

### நிறுவனத்தின் பெயர்

இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

### சட்ட அமைப்பு

1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.
Act No. 49 of 1957

### கூட்டிணைக்கப்பட்ட திகதி

ஜூன் 04, 1987

### பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கண்டவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை.

### பணிப்பாளர் சபை

| | | |
|---|---|---|
| பேராசிரியர் எஸ்.டி. ஜயரத்ன (16.05.2013 வரை) | - | **தலைவர்/ முகாமை பணிப்பாளர்** |
| பேராசிரியர் ரஞ்ஜனி கமகே | - | பணிப்பாளர் |
| டாக்டர் பி.ஜி. மஹிபால | - | பணிப்பாளர் |
| ரொஹான் தர்மதிலக (16.05.2013 வரை) | - | பணிப்பாளர் |
| மேர்வின் குணசேன | - | பணிப்பாளர் |
| லலித் சேனநாயக்க | - | பணிப்பாளர் |
| எம்.ஆர்.ஆர் அபேவிக்ரம (17.05.2013 வரை) | - | பணிப்பாளர் |
| சிசிர ஜினேந்திர பரனகம | - | பணிப்பாளர் |
| நவரத்ன பண்டார அலஹுக்கோன் (17.05.2013 முதல்) | - | பணிப்பாளர் |
| மியுரு பாசித லியனகே (17.05.2013 முதல்) | - | பணிப்பாளர் |

### கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி, டொறிங்டன் சதுக்கம், கொழும்பு -07

### வங்கிகள்

மக்கள் வங்கி
தேசிய சேமிப்பு வங்கி
இலங்கை வங்கி

### முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| எஸ்.டபிள்யூ. ஜயசுந்தர | - | பொது முகாமையாளர் |
| கே.டி.ஏ. குருப்பு | - | முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு) |
| எம்.டி.எ.ஆர். குணரத்ன | - | முகாமையாளர் (பொறியியல்) |
| எச்.கே.எச்.எச். பெரேரா | - | முகாமையாளர் (நிதி) |
| எச்.எம்.எல்.எஸ் தர்ஷன | - | முகாமையாளர் (திட்டமிடல், கொள்வனவு) |
| எஸ்.பி.ஜயவீர | - | முகாமையாளர் (உற்பத்தி) |
| எச்.எம்.ரத்நாயக்க | - | முகாமையாளர் (வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) |
| எஸ். ஜயதிலக | - | உதவி முகாமையாளர் (பொறியியல்) |
| ஏ.ஜி. த அதுரலிய | - | உதவி முகாமையாளர் (உற்பத்தி) |
| வி.பி.முத்துக்குட | - | உதவி முகாமையாளர் (உற்பத்தி) |
| வி.ஜே. பண்டாரவத்த | - | உள்ளக கணக்காய்வாளர் |
| ஆர். குணரத்ன | - | உதவி முகாமையாளர் (மனித வளங்கள்) |
| ஏ.சீ.பி. ஆனந்தகுமார | - | உதவி முகா. (திட்டமிடல், கொள்வனவு) |
| எச்.கே.பி.ஏ. சேனாதீர | - | உதவி முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு) |
| அமில நுவன் ஹேவகம | - | உதவி முகாமையாளர் (உற்பத்தி) |
| டி.எச்.ஹே் குணவர்தன | - | உதவி முகாமையாளர் (பொறியியல்) |
| ஏ.ரி.எம்.குலசேகர | - | உதவி முகாமையாளர் (விற்பனை மேம்பாடு/எம்) |

### கணக்காய்வுக்குழு

| | | |
|---|---|---|
| எம்.ஆர்.ஆர். அபேவிக்ரம | - | தலைவர் |
| லலித் சேனாநாயக்க | - | உறுப்பினர் |
| மர்வின் குணசேன | - | உறுப்பினர் (11.07.2013 வரை) |
| மியுரு பாசித லியனகே | - | உறுப்பினர் (12.07.2013 முதல்) |
| சிசிர ஜினேந்திர பரனகம | - | உறுப்பினர் (12.07.2013 முதல்) |

# அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டமையும் அதன் பிரதான குறிக்கோள்களும்

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 2013ஆம் ஆண்டில் இலங்கை மக்களின் சுகாதார நலன்களுக்குத் தேவையான முக்கியமான மருந்து வகைகளை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதில் 26 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. அ.ம.உ. கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகள் 63 வகையான மாத்திரைகள் மற்றும் கூட்டுக் குளிகைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இந்த உற்பத்திகளில் 40 உற்பத்திகள் இவ்வாண்டில் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் மருந்தாக்கற் பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரேயொரு அரச கூட்டுத்தாபனம் அ.ம.உ.கூ. ஆகும்.

அதன் பிரதான நடவடிக்கைகள்:

(1) மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதி செய்தல் மற்றும் மீள் பொதி செய்தல்.

(2) மேற்கூறப்பட்ட தொழிற்பாடுகளுக்கான தொழில்நுட்ப அறிவை வழங்குதல்.

(3) மருந்தியல் பொருட்கள் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் சம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் மருந்துகளைப் நியமப்படுத்தல்

(4) அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களைச் சந்தைப்படுத்தல்

சந்தைக்கு விடப்படும் எல்லா உற்பத்திகளும் எமது உள்ளக (SPMC) தரக்கட்டுப்பாடுகளுக்கு அமைவாக உள்ளதுடன் பிரித்தானிய மருந்தகவியல் (BP) / ஐக்கிய அமெரிக்க மருந்தகவியல் (USP) தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்கின்றன.

சிறந்த உற்பத்தி நடவடிக்கைகளின் (GMP) ஒழுங்கு விதிகளையும் நடவடிக்கைமுறைகளையும் நடைமுறைப்படுத்தல் ஒழுங்கான தரக்கட்டுப்பாட்டு ஆய்வின் மூலமும் தொழிற்சாலை மேற்பார்வை மூலமும் கிரமமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

# தலைவரின் மீளாய்வு



2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையையும் ஐந்தொகை, வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுகளை உள்ளடக்கிய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கை போன்றவற்றையும் பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (அ.ம.உ.கூ) 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தரமானதும் பயனுறுதியானதும் பாதுகாப்பானதுமான மருந்துப் பொருட்களை நியாயமான விலையில் உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு வழங்கும் நோக்குடன் தாபிக்கப்பட்டது. அ.ம.உ.கூ இலங்கையில் உள்ள மிகப் பாரிய முன்னணி மருந்தாக்கற்பொருட்கள் உற்பத்தி நிறுவனமாகும்.

தற்போது, பரந்த அளவிலான மருந்தாக்கவியல் உற்பத்திகளை உள்ளிட்ட 63 மருந்துப் பொருட்களை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக்கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்கின்றது. அ.ம.உ. கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் எல்லா உற்பத்திகளும் பிரித்தானிய மருந்தகவியல் (BP), ஐக்கிய அமெரிக்க மருந்தகவியல் (USP) மற்றும் அ.ம.உ.கூ.வின் நியமங்கள் ஆகியவற்றினால் தேவைப்படுத்தப்படும் நியமங்களுக்கு அமைவானவையாகும். தற்போதைய சிறந்த உற்பத்தி நடைமுறைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளக தர ஆய்வு மற்றும் தொழிற்சாலை பரிசீலனை ஊடாக கண்காணிக்கப்படுகின்றது.

அ.ம.உ. கூட்டுத்தாபனத்தின் மருந்தாக்கற் பொருட்களின் உற்பத்தி வசதி நவீன ஜப்பானிய, ஜேர்மன் மற்றும் கொரிய இயந்திரங்களைக் கொண்டுள்ளது. உற்பத்தி வசதிகள் அதீத தூய சுற்றாடலைக் கொண்டுள்ளதுடன் உலக சுகாதாரத் தாபனத்தின் சிறந்த உற்பத்தி நடைமுறைகளுக்கு அமைவானதாகும்.

அ.ம.உ. கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்கள் மருத்துவர்கள், மருந்தாளர்கள் மற்றும் சுகாதாரத் துறையிலுள்ள ஏனைய வல்லுனர்களால் மதிக்கப்பட்டு விரும்பப்படுகின்றன. தரமான மருந்தாக்கற் பொருட்களை உற்பத்திசெய்வோர் என நாம் பிரபல்யமாகி இருப்பதே எமது வெற்றிக்குப் பின்னால் உள்ள மிக முக்கியமான உந்துசக்தியாகும்.

## செயலாற்றும்

கூட்டுத்தாபனம் முன்னர் ஒரு போதும் இல்லாத விதிவிலக்கான செயலாற்றல் பெறுபேறுகளை 2013ஆம் ஆண்டில் பதிவு செய்தது.

2013ஆம் ஆண்டின் ரூபா 304 மில்லியன் தொழிற்பாட்டு இலாபம் 2012ஆம் ஆண்டின் ரூபா 85 மில்லியனுடன் ஒப்பிடும் போது அதன் வளர்ச்சி 257% ஆகும்.

2013ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் ரூபா 209 மில்லியன் 2012ஆம் ஆண்டின் ரூபா 98 மில்லியனுடன் ஒப்பிடும் போது அதன் வளர்ச்சி 113% ஆகும்.










## உற்பத்தி வெளியீடு

2013ஆம் ஆண்டுக்கான மொத்த உற்பத்தி 2003 மில்லியன் குளிகை / கூட்டுக்குளிகை அலகுகள் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் பதிவுசெய்யப்பட்ட அதிகூடிய வெளியீடாகும்.




## புரள்வு

2013ஆம் ஆண்டுக்கான புரள்வு ரூபா 1941 மில்லியன் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் பதிவுசெய்யப்பட்ட அதிகூடிய புரள்வு ஆகும். மொத்த விற்பனைகளில், 72.75% சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவுக்கும் (ம.வ.பி) எஞ்சிய விற்பனை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்கும் (அ.ம.கூ) எம்முடன் பதிவு செய்துள்ள தனியார் மருந்தகங்களுக்கும் மேற்கொள்ளப்பட்டன.



அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் திறைசேரியின் உதவியின்றி அதன் சொந்த வளங்களைக் கொண்டு இலாபத்தை ஈட்டக்கூடியவாறு நன்கு முகாமைத்துவம் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். உண்மையில், அ.ம.உ. கூட்டுத்தாபனம் 2013ஆம் ஆண்டில் திறைசேரிக்கு ரூபா. 20 மில்லியனை வழங்குவதன் மூலம் ஒரு பொதுக்கூட்டுத்தாபனம் என்ற வகையில் அதன் பொறுப்பினை நிறைவேற்றியுள்ளது.

## அபிவிருத்திப் பணிகள்

### தொழிற்சாலை அபிவிருத்தி

உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் பொதியிடும் பிரிவுக்கு புதிய பொதியிடும் இயந்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு தொழிற்சாலையும் நவீனமயப்படுத்தப்பட்டதுடன் நவீன சூழலில் பணிபுரியக் கூடிய விதத்தில் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் தொழில் புரியும்போது போதிய பயிற்சியும் அளிக்கப்பட்டது.

### வளாக அபிவிருத்தி

இவ்வாண்டில் நிர்வாக நோக்கத்துக்கான கட்டிடத்தின் நிர்மாணமும் பூர்த்தி செய்யப்பட்டது.

### விரிவாக்கல் கருத்திட்டம்

தொழிற்சாலையின் விரிவாக்கத்துக்கான நிதியீட்டத்தினை அ.ம.உ. கூட்டுத்தாபனம் ‘ஜைக்கா’ நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டது. இந்தப் பணி 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உத்தேச விரிவாக்கல் பூர்த்தியடைந்ததும் உற்பத்தி 3500 மில்லியன் அலகு குளிகைகள் மற்றும் கூட்டுக்குளிகைகளாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கும் தற்போதுள்ள கட்டிடங்களைப் புதுப்பிப்பதற்கும் மூலப்பொருட்களையும் முடிவுப் பொருட்களையும் களஞ்சியப்படுத்துவதற்கு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் அ.ம.உ. கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

### தர மேம்பாடு

2013ஆம் ஆண்டில், துரிதமான உற்பத்திக்கு தரக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு ஆதரவளிப்பதற்காக ஒரு புதிய ‘Metrohm 915 Karlfisher’ ஈரப்பதன் மீற்றர் பொருத்தப்பட்டது.

### ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

2013ஆம் ஆண்டின் போது, இரண்டு உற்பத்திகளுக்கு வடிவமைப்பு அங்கீகாரமும் மூன்று உற்பத்திகளுக்கு உற்பத்தி அங்கீகாரமும் வழங்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக, ‘ஸ்பிரோனோலெக்டோன்’ குளிகைகள் USP 25 மிகி வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டு அவ்வாண்டில் ஒரு புதிய உற்பத்தியாக வெளியிடப்பட்டது.

### மனித வளங்கள் அபிவிருத்தியும் சேம நலனும்

இரண்டு சுழற்சி முறைகளில் வினைத்திறன் மிக்கதும் சுமுகமானதுமான தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக அ.ம.உ. கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் தொழிலின் போது பயிற்சியை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ள 20 பயிலுனர்களை உள்ளிட்ட 234 ஊழியர்கள் 2013.12.31இல் உள்ளவாறு அ.ம.உ. கூட்டுத்தாபனத்தில் காணப்பட்டனர். உள்நாட்டு நிறுவனங்களால் நடத்தப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 105 ஊழியர்களும் வெளிநாட்டில் 11 ஊழியர்களும் பயிற்றப்பட்டனர்.

அ.ம.உ. கூட்டுத்தாபன ஊழியர்களால் கோரப்பட்ட அடிப்படை சேமநலன் வசதிகளை தொடர்ந்தும் வழங்கியது. அவர்கள் வருடாந்த சுற்றுலா / ஒன்றுகூடல், சிங்கள புதுவருட கொண்டாட்டங்கள் மற்றும் விளையாட்டு விழா போன்ற சமூக சேமநலன் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கும் ஊக்குவிக்கப்பட்டனர்.

### உபாயத்திட்டமும் வாய்ப்பு வளங்களும்

எமது பிரதான குறிக்கோள் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் (MSD) பிரிவு, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் (SPC), மருந்தகங்கள் மற்றும் மருத்துவ உயர்தொழில் துறையைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்குத் தேவையான மருந்தாக்கற் பொருட்களை தடங்கலின்றி வழங்குவதாகும். இந்த நடவடிக்கைக்கு வசதியளிப்பதற்காக உற்பத்திக்கான கட்டிட கொள்ளளவு, களஞ்சியப்படுத்தல் இடவசதி மற்றும் நிர்வாக அலகு ஆகியவற்றை நாம் ஏற்கனவே விரிவுபடுத்தியுள்ளோம். மிகுந்த உபகரணங்களைக் கொண்ட ஆய்வுகூட இடப்பரப்பு இலங்கையின் வறிய மக்களுக்கு நியாய விலையில் உயர் தரத்திலான மருந்துப் பொருட்களை வழங்குவதை உறுதிப்படுத்தும்.

இந்த விரிவாக்கல், உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கும் உற்பத்தி வகைகளை விரிவாக்குவதற்கும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கும் அ.ம.உ. கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைந்த நற்பெயரை உருவாக்குவதற்கும் ஆதரவளிக்கும்.

### நன்றி நவிலல்

பணிப்பாளர் சபை சார்பாக, இலங்கையில் மருந்தாக்கற் பொருட்கள் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பெறுமதிமிக்க வழிகாட்டலையும் ஆதரவையும் வழங்கிய கௌரவ சுகாதார அமைச்சர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக அவர்களும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் வழங்கிய வழிகாட்டுதல்களையும் நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

பொதுத் திறைசேரியின் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் நல்கிய பங்களிப்புகளுக்காக அவர்களுக்கும் எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்கு பாரிய பங்களிப்புகளை மேற்கொண்ட அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் (SPC), மருத்துவ வழங்கல் பிரிவு (MSD), மருந்தகங்கள் மற்றும் மருத்துவ உயர் தொழில்துறையைச் சேர்ந்தவர்களுடன் உன்னதமான ஒரு தொடர்பை பேணிவந்தோம் என்பதை நன்றியறிதலுடன் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அ.ம.உ.கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர், சிரேஷ்ட முகாமையாளர்கள், நிறைவேற்றுப் பணியாளர்கள் மற்றும் எல்லா மட்டங்களிலும் உள்ள ஊழியர்கள் 2013ஆம் ஆண்டில் சாதகமான பெறுபேறுகளை அடைவதற்கு வழங்கிய அர்ப்பணிப்பை நாம் வெகுவாகப் பாராட்டுகின்றோம்.

இறுதியாக, கூட்டுத்தாபனத்தை வெற்றியை நோக்கி வழிநடத்திச் செல்வதற்கு பெறுமதிவாய்ந்த பங்களிப்புகளை நல்கிய பணிப்பாளர் சபைக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பேராசிரியர் எஸ்.டீ. ஜயரத்ன

தலைவர்

இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

2013 பெப்ரவரி 14

# பணிப்பாளர்கள்

**பேராசிரியர் எஸ்.டீ. ஜயரத்ன - தலைவர்**

பேராசிரியர். எஸ்.டீ. ஜயரத்ன ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக மருத்துவத் துறையின் மருத்துவப் பேராசிரியர் ஆவார். அத்துடன் அவர் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கௌரவ ஆலோசக மருத்துவ வல்லுநரும் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் ஆவார்.

அவர் எப்.ஆர்.சி.எஸ். (லண்டன்), எம்.டீ. (இலங்கை) எம். ஆர்.சீ.பீ. (U.K) எம்.பி.பி.எஸ். (இலங்கை) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளதுடன் இலங்கை மருத்துவப் பட்டப்படிப்பின் கற்கை நிறுவகம் அவருக்கு பொது மருத்துவ விசேட நிபுணர் சான்றிதழ் அளித்துள்ளது.

அவர் இலங்கை மருத்துவப் பேரவையின் முழுநேர உறுப்பினராகவும் (பதிவு இல. 6319) சேவையாற்றுவதுடன் ஐக்கிய இராச்சிய பொது மருத்துவப் பேரவை உறுப்பினராகவும் இலங்கை மருத்துவர்கள் கல்லூரியின் ஆயுட்கால உறுப்பினராகவும் இலங்கை இரைப்பைக்குடல் அழற்சியியல் (gastroenterological) மற்றும் ‘என்டொஸ்கோபிக்’ (endoscopic) சங்கத்தின் உறுப்பினராகவும் உள்ளார்.

**எஸ்.எம்.என். லலித் சேனநாயக்க -** பணிப்பாளர்

திரு. லலித் சேனநாயக்க தொழில் ரீதியாக பட்டயக் கணக்காளராவார். தற்போது அவர் ரியூடர் வி. பெரேரா அன் கம்பனி பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சிரேஷ்ட பங்காளராகவும் பினான்சியல் கொன்சல்டன்ஸ் அன் எலைட் சேவிசஸ் (பிறைவேற்) லிமிரெட்டின் பணிப்பாளராகவும் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராகவும் சென்றல் இன்ஜினியரிங் கொல்சல்டன்சி பியூறோ நிறுவனத்தின் பணப்பாளராகவும் சேவையாற்றிக்- கொண்டிருக்கின்றார்.

அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் சக உறுப்பினராக இருப்பதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான இளமாணி (பொது நிர்வாகம்) விசேட பட்டத்தைப் பெற்றுள்ளார். அவர் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவக் கற்கைகளில் உயர் தேசிய டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

அவர் அரச மரக்கூட்டுத்தாபனத்தில் பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தில் பணிப்பாளர் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையில் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

**டாக்டர். பி.ஜி. மஹிபால - பணிப்பாளர்** (2013.05.17இல் இருந்து)

டாக்டர் பி.ஜி. மஹிபால சுகாதார அமைச்சின் தற்போதைய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆவார்.

அவர் எப்.சி.எம்.ஏ., டீ.பீ.எஸ்., டீ. முகாமைத்துவம், டீ.டீ.எம்., எம்.பீ.ஏ, டீ.ஈ.டீ, எம்.டீ., எம்.எஸ்.சி. மற்றும் எம்.பீ.பீ.எஸ். (இலங்கை) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்.

அத்துடன் அவர் 1995இல் மொறவக நிறுவகத்தின் (மாத்தறை மாவட்டம்) மருத்துவ அலுவலராகவும் 1992இல் மாத்தறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட மருத்துவ அலுவலராகவும் 1995இல் காலி மாவட்டத்தில் மருத்துவ அலுவலராகவும் (தாய், சேய் நலன்) 1995 முதல் 1996 வரை அம்பாந்தோட்டை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் 1997 முதல் 1998 வரை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகவும் 1998இல் சுகாதார அமைச்சில் பிராந்திய பராமரிப்பு சேவைகள் பணிப்பாளராகவும் 1998 முதல் 2003 வரை சுகாதார அமைச்சின் பதில் மருத்துவ சேவைகள் பணிப்பாளராகவும் 2004இல் சுகாதார அமைச்சில் மனநல சுகாதார பதில் பணிப்பாளராகவும், 2006 முதல் 2010 வரை சுகாதார அமைச்சில் பதில் பணிப்பாளர் (எம்.எஸ்.டீ) ஆகவும் சுகாதார அமைச்சில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (சுகாதார சேவைகள்) ஆகவும் சேவையாற்றியுள்ளார்.

**மேர்வின் குணசேன - பணிப்பாளர் (16.05.2013 இல் இருந்து)**

திரு. மேர்வின் குணசேன தற்போது சுகாதார அமைச்சில் கௌரவ சுகாதார அமைச்சர் அவர்களின் பிரத்தியேக செயலாளராவார்.

அவர் எல்.எல்.பீ (சட்ட இளமாணி), சட்டத்தரணி ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளதுடன் எம்.ஏ. (சமூகவியல்) பட்டத்தைப் பூர்த்தி செய்து பெறுபேறுக்காகக் காத்திருக்கின்றார்.
அத்துடன் அவர் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், சமூகப்பாதுகாப்பு சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்), சென்றல் இன்ஜினியரிங் கொன்சல்டன்சி பியூறோ நிறுவகத்தின் செயலாற்றுப் பணிப்பாளர், கொழும்பு மாரதற பார்ஸ் நிறுவகத்தின் சட்டத்தரணி ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

**பேராசிரியர் ரஞ்ஜனி கமகே - பணிப்பாளர் (16.05.2013 இல் இருந்து)**

பேராசிரியர் ரஞ்ஜனி கமகே தற்போது கொழும்பு பல்கலைக் கழக மருத்துவத் துறையின் வருகை தரும் மருத்துவ பேராசிரிரும் இலங்கை தேசிய வைத்தியசாலையின் ஆலோசக நரம்பியல் நிபுணரும் ஆவார்.
அவர் எப்.சி.சி.பி., எம்.ஆர்.சி.பி. (ஐக்கிய இராச்சியம்), எம்.டீ. (இலங்கை) மற்றும் எம்.பீ.பீ.எஸ். (இலங்கை) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்.
அத்துடன் அவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவப் பட்டப்படிப்பின் கற்கை நிறுவகத்தின் வருகை தரும் பேராசிரியராகவும் ராகம போதனா வைத்தியசாலையின் ஆலோசக நரம்பியல் நிபுணராகவும் சேவையாற்றிக்கொண்டிருக்கின்றார்.

**எம். ருக்மல் அபேவிக்கிரம - பணிப்பாளர்**

திருமதி எம். ஆர். ஆர். அபேவிக்கிரம தற்போது நிதி, திட்டமிடல் அமைச்சின் வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகப் பணிபுரிவதுடன் திணைக்களத்தில் சுகாதார வரவு செலவுத் திட்டம் என்னும் விடயத்தைக் கையாள்கின்றார்.

அவர் இலங்கை திட்டமிடல் சேவையில் 1994ஆம் ஆண்டு இணைந்து இற்றை வரை பகிரங்க சேவையில் உதவிப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் ஆகிய பதவிகளை தேசிய திட்டமிடல், நிதிக் கொள்கை மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சின் நிதிக்கொள்கை மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தில் 1994ஆம் ஆண்டில் இருந்து 2013ஆம் ஆண்டு வரை வகித்துள்ளார். பொதுத் திறைசேரியில் சுகாதார நிதியீடு மற்றும் திட்டமிடலில் இவர் மிகுந்த அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

அவர் சுகாதார பொருளியல் மற்றும் சுகாதாரக் கொள்கையில் விஞ்ஞான முதுமாணி (ஐக்கிய.இராச்சியம்) பட்டத்தையும், பொருளியல் அபிவிருத்தியில் பட்டப்படிப்பின் டிப்புளோமா பட்டத்தையும் (கொழும்பு), சட்ட இளமாணி பட்டத்தையும் (இலங்கை திறந்த பல்கலைக் கழகம்) வணிக இளமாணி பட்டத்தையும் (கொழும்பு) பெற்றுள்ளார்.

அவர் விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, ஆயுர்வேத மருத்துவப் பேரவை மற்றும் சுதேச மருத்துவ நிறுவகம் ஆகியவற்றில் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார்.

**சிசிர ஜினேந்திர பரணகம – பணிப்பாளர் (2013.05.17இல் இருந்து)**

திரு. சிசிர ஜினேந்திர பரணகம அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினராவார்.

அவர் சந்தைப்படுத்தலில் பட்டம் பெற்றுள்ளார்.

மேலும் அவர் மீன் கொடுப்பனவு அமைச்சில் பிரதி தலைவராகவும், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் பணிப்பாளராகவும், இலங்கை வணிக முகாமைத்துவ ஆலோசணை சபையில் உறுப்பினராகவும், தற்போது பஸ்நாயக்க நிலமே மகா சமந்தேவாலய பலாங்கொடையில் சேவையாற்றுகிறார்

**நவரத்தின பண்டார அழகக்கோன் - பணிப்பாளர் (2013.05.17இல் இருந்து)**

திரு. நவரத்தின பண்டார அழகக்கோன் இலங்கை வங்கியின் முகாமையாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று தற்போது பொலனறுவை மாவட்ட உள்ளூர் வருகை தரும் குழு உறுப்பினராகவும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பொலனறுவை மாவட்ட கிராமிய வங்கி சங்கத்தின் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

இவர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கலை இளமாணிப் பட்டத்தையும் திறந்த பல்கலைக் கழகத்தில் தொழில்முயற்சி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் இந்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் கிராமிய வறுமை ஒழிப்புப் பயிற்சியையும் இலங்கை வங்கியில் பாரிய அளவிலான தொழில்முயற்சிகள், வணிக அபிவிருத்தி தொடர்பான கடன் திட்டம் பற்றியும் விற்பனை ஊக்குவிப்பு பற்றியும் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) விசேட பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றுள்ளார்.

அவர் இலங்கை வங்கியில் நிறைவேற்று அலுவலராகவும், வங்கி முகாமையாளராகவும் 34 வருட அனுபவத்தைப் பெற்றுள்ளதுடன் பொலனறுவைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் (1983), வரையறுக்கப்பட்ட ரஜரட்ட பஸ் கம்பனியின் தலைவராகவும் (2005 – 2007 போக்குவரத்து அமைச்சு) வரையறுக்கப்பட்ட மகாவலி பொறியியல் கம்பனியின் பணிப்பாளராகவும் (2006 - 2007 காணி நீர்ப்பாசன அமைச்சு), கமத்தொழில் காப்புறுதிச் சபையின் பணிப்பாளராகவும் (2007 - 2008 கமத்தொழில் சேவைகள் அமைச்சு), வரையறுக்கப்பட்ட தம்மங்கடுவ உரக்கம்பனியின் தொழிற்படு பணிப்பாளராகவும் (2007 – 2008 கமத்தொழில், கமத்தொழில் சேவைகள் அமைச்சு) மற்றும் இலங்கை தம்மங்கடுவ உரக்கம்பனியின் தொழிற்படு பணிப்பாளராகவும் (2008-2010 கமத்தொழில் மற்றும் கமத்தொழில் சேவைகள் அமைச்சு) அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

**மியுறு பாஷித லியனகே - பணிப்பாளர் (2013.05.17 முதல்)**

மியுறு பாஷித லியனகே அவர்கள் தற்போது கௌரவ அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அவர்களின் இணைப்புச் செயலாளராகவும் சரச கம்பனிகள் குழுமத்தின் தலைவராகவும் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பத்திரிகைத்துறை ஆலோசகராகவும் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு (வெளிவிவகார) ஆலோசகராகவும் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

அவர் பொதுசன தொடர்பாடலில் விசேட பட்டத்தையும், பெல்வூட்டில் இருந்து கவின் கலைகளில் உயர் டிப்புளோமா பட்டத்தையும் என்.ஐ.பீ. எம். இல் வணிக முகாமைத்துவ டிப்புளோமா பட்டத்தையும் இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலிருந்து எழுதுனர்துறை மற்றும் பொதுசன தொடர்பாடலில் டிப்புளோமா பட்டத்தையும் கொழும்பு பல்கலைக் கழகத்தில் (2012) பத்திரிகைத் துறையில் டிப்புளோமா பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் எழுதுனர்துறை மற்றும் வெகுசன தொடர்பாடலில் கற்கை நெறிச் சான்றிதழையும் பெற்றுள்ளதுடன் தற்போது கொழும்பு பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத் துறை மற்றும் வெகுசன ஊடகக் கற்கைகள் துறையில் பட்டப்படிப்பின் டிப்புளோமா கல்வி நெறியை மேற்கொண்டுள்ளார்.

அவர் ஒரு பத்திரிகையாளராகவும் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் நிகழ்ச்சி வழங்குனராகவும் (presenter) பணிபுரிந்துள்ளார்.

# பணிப்பாளர்கள் அறிக்கை

2013 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தமது அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளையும் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது. கணக்குகள் 99 – 112 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

- பிரதான செயற்பாடுகள்
  கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:

- மருந்துப்பொருட்களின் உற்பத்தி, பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடல் மற்றும் மீள்பொதியிடல்
- மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கான தொழில்நுட்ப அறிவை வழங்குதல்
- மருந்தகவியல் மற்றும் மருந்தாக்கல் ஆராய்ச்சி மற்றும் மருந்துப்பொருட்களின் தரத்தை உயர்த்துதல் மற்றும்
- அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களைச் சந்தைப்படுத்தல்

இவ்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளில் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இடம்பெறவில்லை.

### வணிக மீளாய்வு
2013 டிசம்பர் 31 அன்று கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளின் நிலைமை 86ஆம் பக்கத்தில் உள்ள ஐந்தொகையில் தரப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் கூட்டுத்தாபனத்தின் ஒரு மதிப்பீடு 73 - 75ஆம் பக்கத்தில் உள்ள தலைவரின் மீளாய்வில் தரப்பட்டுள்ளது.

### புரள்வும் விளைவுகளும்
இவ்வாண்டுக்கான புரள்வும் விளைவுகளும் 87ஆம் பக்கத்தில் உள்ள வருமானக் கூற்றிலும் உரிமைப்பங்கில் மாற்றம் பற்றிய கூற்று 88ஆம் பக்கத்திலும் தரப்பட்டுள்ளன.

### எதிர்கால அபிவிருத்தி
வணிகத்தில் எதிர்கால அபிவிருத்திகள் 73 - 75 ஆம் பக்கத்தில் உள்ள தலைவரின் மீளாய்வில் தரப்பட்டுள்ளன.

### நன்கொடைகள்
இவ்வாண்டில், கூட்டுத்தாபனத்தினால் எவ்வித நன்கொடைகளும் வழங்கப்படவில்லை.

### ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள்
இவ்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மாற்றம் 99ஆம் பக்கத்தில் உள்ள நிதியியல் கூற்றின் குறிப்பு 1இல் தரப்பட்டுள்ளது.

### பங்கிலாபம் / பங்களிப்பு
பொதுத் திறைசேரியின் திரண்ட நிதிக்கு பணிப்பாளர்களின் விதப்புரையின் பிரகாரம் பங்கிலாபம் மூலமாக ரூபா 20,000,000.00 வழங்கப்பட்டது.

### ஒதுக்கங்கள்
கூட்டுத்தாபனத்தின் ஒதுக்கங்களும் அவற்றின் ஆக்க அமைவும் 88ஆம் பக்கத்தில் உள்ள நிதிக்கூற்றில் உரிமைப்பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்றில் தரப்பட்டுள்ளன.

### பணிப்பாளர்கள்
பணிப்பாளர் சபை சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஆறு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. பணிப்பாளர்களில் ஒருவர் நிதி அமைச்சுப் பிரதிநிதியும் மற்றுமொருவர் சுகாதார அமைச்சின் பிரதிநிதியும் ஆவர்.

### புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

பணிப்பாளர் சபையின் புதிய உறுப்பினர்கள் 2013 மே மாதம் முதல் நியமிக்கப்பட்டனர். இந்தக் காலப்பகுதியல், பணிப்பாளர்கள் பன்னிரண்டு கூட்டங்களை நடத்தினர். சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக தலைவரும் பணிப்பாளர் சபையும் பொறுப்புமிக்கவர்களாவர்.

| | | | |
|---|---|---|---|
| பேராசிரியர் எஸ்.டீ.ஜயரத்ன | - தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் | | |
| டாக்டர் பி.ஜி. மஹிபால | - பணிப்பாளர் | - | சுகாதார அமைச்சுப் பிரதிநிதி |
| லலித் சேனாநாயக்க | - பணிப்பாளர் | | |
| எம்.ஆர்.ஆர். அபேவிக்கிரம | - பணிப்பாளர் | - | நிதி அமைச்சுப் பிரதிநிதி |
| சிசிர ஜினேந்திரா பரணகம (2013.05.07இல் இருந்து) | - பணிப்பாளர் | | |
| நவரத்தின பண்டார அளகக்கோன் (2013.05.07இல் இருந்து) | - பணிப்பாளர் | | |
| மியுரு பாசித லியனகே (2013.05.07இல் இருந்து) | - பணிப்பாளர் | | |

### முன்னைய சபை உறுப்பினர்கள்

முன்னைய சபை உறுப்பினர்கள் 2010 மே மாதம் முதல் 2013 மே மாதம் வரை செயற்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| பேராசிரியர் எஸ்.டீ.ஜயரத்ன | - தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் | | |
| பேராசிரியர் ரஞ்ஜனி கமகே (2013.05.16 வரை) | - பணிப்பாளர் | | |
| டாக்டர் பி.ஜி. மஹிபால | - பணிப்பாளர் | - | சுகாதார அமைச்சுப் பிரதிநிதி |
| ரொஹான் தர்மதிலக (2013.05.16 வரை) | - பணிப்பாளர் | | |
| மேர்வின் குணசேன (2013.05.16 வரை) | - பணிப்பாளர் | | |
| லலித் சேனாநாயக்க | - பணிப்பாளர் | | |
| எம்.ஆர்.ஆர். அபேவிக்கிரம | - பணிப்பாளர் | - | நிதி அமைச்சுப் பிரதிநிதி |

### கணக்கீட்டுக் கொள்கைகள்
கூட்டுத்தாபனத்தின் பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் 91 – 98 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### சுற்றாடல் பாதுகாப்பு
சுற்றாடலுக்குப் பாதிப்பில்லா விதத்தில் செயற்படுவதும் நாம் தொழிற்படும் சமூகத்தில் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு பயன்மிக்க தாக்கத்தைக் கொண்ட உயர் தரத்திலான உற்பத்திகளை வழங்குவதும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும்.

### நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்
அரசாங்கத்துக்கும் ஊழியர்களுக்குமான எல்லா நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் ஐந்தொகைத் திகதியில் செலுத்தப்பட்டுள்ளன.

### ஐந்தொகைத் திகதியின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்
நிதிக்கூற்றுகளில் திருத்தங்களை அல்லது வெளிப்பாட்டைத் தேவைப்படுத்தும் எவ்வித நிகழ்வும் ஐந்தொகைத் திகதியிலிருந்து இடம்பெறவில்லை.

### நடைபெற்றுக் கொண்டிருக்கும் அக்கறை
நடைபெற்றுக்கொண்டிருக்கும் அக்கறை எண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன. எதிர்வுகூறக்கூடிய காலத்தில் கூட்டுத்தாபனத்தில் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு போதிய வளங்களைக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை திருப்தியடைகின்றது.

### கணக்காய்வாளர்களை நியமித்தல்
1971ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காளர் தலைமை அதிபதி கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளராவார். 2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயற்பாடுகளின் கணக்காய்வை அவர் மேற்கொண்டார்.

**பேராசிரியர் எஸ்.டீ. ஜயரத்ன**

**தலைவர்**

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

கணக்காய்வுக் குழு 2010ஆம் ஆண்டின் PED 55ஆம் இலக்க அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைக்கப்பட்டது.

கணக்கீட்டு அறிக்கையிடல் பற்றி தொடர்ச்சியாக மீளாய்வு செய்து, கண்காணித்து இணங்கி ஒழுகாமை பற்றி பணிப்பாளர் சபைக்கு விதப்புரைகளை வழங்குதல், உள்ளக / வெளி கணக்காய்வு அறிக்கைகள், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முகாமைத்துவக் கடிதங்கள் மற்றும் விதப்புரைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்தல், போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகம் செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபைக்கு உதவுதல் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் எல்லா சம்பந்தப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கு இணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்புடைய இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொருத்தமான சட்டத் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் பிரகாரம் நிதியியல் அறிக்கையிடுவதை உறுதிப்படுத்துவதற்கு மேற்பார்வை செய்யும் பணியில் கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு உதவுதல் வேண்டும்.

நிறைவேற்றுத் துறையைச் சாராத நான்கு பணிப்பாளர்களைக் கொண்ட கணக்காய்வுக் குழுவுக்கு திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் தலைமை வகிக்கின்றார்.

மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி / திணைக்களப் பிரதிநிதி ஓர் அவதானிப்பாளராகப் பங்குபற்றியதுடன் சுகாதார அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டவாறு ஓர் அவதானிப்பாளராகப் பங்குபற்றினார்.

2013ஆம் நிதியாண்டின்போது, நான்கு (04) கணக்காய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன.

குழு 2013ஆம் ஆண்டில்,

- 2012ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வெளியிடுதல் பற்றி கவனம் செலுத்தியது.
- பிரச்சினைகளின் தன்மைகள், திணைக்களத் தலைவர்களின் பதில்கள், குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அடங்கலாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளைக் கவனத்தில் கொண்டது.
- கூட்டுத்தாபனத்தின் சுமுகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக களஞ்சியங்கள், மற்றும் கையிருப்புகள், விற்பனைகள், உற்பத்தி, சாதனங்களின் கொள்வனவு, நிதி, மனித வளங்கள் மற்றும் திணைக்களங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் ஆகிய விடயப்பரப்புகளில் பல்வேறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றி மீளாய்வு செய்து பொருத்தமான விதப்புரைகளை மேற்கொண்டது.
- குழுவின் விதப்புரையின் பிரகாரம், சம்பந்தப்பட்ட முகாமையாளரால் / அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகளை மீளாய்வு செய்தது.
- மாதாந்த நிதி அறிக்கைகளை மீளாய்வு செய்து திருத்தங்கள் மற்றும் மேம்பாடுகளுக்கான விதப்புரைகளை மேற்கொண்டது.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வேண்டப்பட்டவாறு 2012ஆம் ஆண்டு முதல் நிதி அறிக்கையிடலுக்காக SLFRS/ LKASயை ஏற்று நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக உரிய கவனம் செலுத்தியது.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்கள் பற்றி முகாமைத்துவத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துகளை பரிசீலித்தது.
- 2013ஆம் ஆண்டுக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கூட்ட அறிக்கைகளையும் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் அனுப்பப்பட்ட பதிலையும் மீளாய்வு செய்தது.
- 2013ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவுத் திட்டத்தையும் திருத்திய மூலதன வரவு செலவுத் திட்டத்தையும் மீளாய்வு செய்தது.
- 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தையும் மூலதன வரவு செலவுத் திட்டத்தையும் மீளாய்வு செய்தது.
- இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையினால் (SLAASMB) மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகளை மீளாய்வு செய்தது.

குழுவின் செயலாற்று எல்லை எல்லா சாதன அம்சங்களையும் (material aspects) உள்ளடக்குகின்றது என்பது குழுவின் அபிப்பிராயமாகும்.

கணக்காய்வுக்குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| எம்.ஆர்.ஆர். அபேவிக்கிரம | - தலைவர் | - பணிப்பாளர் - அ.ம.உ.கூ. / திறைசேரிப் பிரதிநிதி |
| லலித் சேனநாயக்க | - உறுப்பினர் | - பணிப்பாளர் - அ.ம.உ.கூ. |
| மேர்வின் குணசேன | - உறுப்பினர் | - பணிப்பாளர் - அ.ம.உ.கூ. (2013.07.11 வரை) |
| மியுறு பாசித லியனகே | - உறுப்பினர் | - பணிப்பாளர் - அ.ம.உ.கூ. (2013.07.12 முதல்) |
| சிசிர ஜினேந்திர பரணகம | - உறுப்பினர் | - பணிப்பாளர் - அ.ம.உ.கூ. (2013.07.12 முதல்) |

**எம்.ஆர்.ஆர். அபேவிக்கிரம**
**தலைவர் - கணக்காய்வுக்குழு**
**04.03.2014**

# கூட்டிணை நிறுவன ஆளுகை அறிக்கை

மிகுந்த வெளிப்படைத்தன்மை, சிறந்த, உரிய காலத்தில் அறிக்கை செய்தல் என்பவற்றை உறுதிப்படுத்தி பங்கீடுபாடு உடையவர்களின் அதிசிறந்த அக்கறையைக் கவனத்தில் கொண்டு கம்பனிகள் முகாமைத்துவத்தினால் வழிப்படுத்தப்பட்டுக் கட்டுப்படுத்தப்படும் முறைமையே கூட்டு நிறுவன ஆளுகையாகும்.

பணிப்பாளர்கள் சபை கூட்டுத்தாபனத்தின் ஆளுகைக்குப் பொறுப்பாக உள்ளது.

## பணிப்பாளர்கள்

பணிப்பாளர்கள் சபை பொறியியல், முகாமைத்துவம், நிதியியல் மற்றும் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த உயர்தொழில் துறையினரான அனுபவம் மிக்க ஆட்களைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபை நிறைவேற்றுப் பணிப்பாளராக இருக்கும் ஒரு தலைவரையும் ஆறு நிறைவேற்றுத்துறை சாராத பணிப்பாளர்களையும் கொண்டுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அல்லது கௌரவ அமைச்சரினால் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாவிட்டாலன்றி, சபை மாதாந்த இடைவேளைகளில் கூடுவதுடன் அதற்கு மேலதிகமாக தேவைக்கேற்றவாறு விசேட கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் பன்னிரண்டு பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

## முகாமைத்துவக் குழு

கூட்டு நிறுவன முகாமைத்துவக் குழு கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கீழ் இயங்குகின்றது. குழு கூட்டுத்தாபனத் திணைக்களங்களின் தலைவர்களையும் பிரதித் தலைவர்களையும் கொண்டுள்ளது.

முகாமைத்துவக் குழு கூட்டுத்தாபனத்தின் நாளாந்த தொழிற்பாடுகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொண்டு, கொள்கைத் தீர்மானங்களையும் உபாயத்திட்டக் குறிக்கோள்களையும் நடைமுறைப்படுத்துவதுடன் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமானவாறு பணிப்பாளர் சபைக்கு விதப்புரைகளை மேற்கொள்கின்றது.

முகாமைத்துவக் குழு மாதாந்த இடைவேளைகளில் கூடுகின்றது.

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக்குழு 'சிறந்த ஆளுகைக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் வழிகாட்டல்' மற்றும் பொது நிதிச் சுற்றறிக்கைக் ஆகியவற்றின் பிரகாரம் அமைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வுக் குழு கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுத்துறை சாராத மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. நிதி அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் குழுவுக்குத் தலைமை வகிக்கின்றார்.

கணக்காய்வுக் குழு கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை சுயாதீனமாகப் பரிசீலித்து மதிப்பிடுகின்றது. ''உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின்'' பிரகாரம் மேற்கொள்ளப்படும் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடு கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்படுவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிவிக்கப்படுகின்றது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ஐந்து கணக்காய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 81ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## முதலீட்டாளர்களின் தொடர்பும் அரசாங்க வகைகூறலும்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பொதுமக்கள் சார்பாக அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்டு, உடைமையாக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்படுகின்றது.

எனவே, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையும் முகமையாளர்களும் பொறுப்பு முயற்சியை முகாமைத்துவம் செய்வதில் மத்திய அரசாங்க அமைச்சு என்ற வகையில் சுகாதார அமைச்சுக்கும் நிதி அமைச்சின் திறைசேரிக்கும் பொறுப்புமிக்கவர்களாவர்.

ஆண்டறிக்கை, வருடாந்தக் கணக்குகள், வருடாந்த வரவு செலவுத் திட்டங்கள், காலாண்டுச் செயலாற்ற அறிக்கைகள் ஆகியவற்றை அதே அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் மேலே சொல்லப்பட்ட பொறுப்புகள் நிறைவேற்றப்படுகின்றன.

ஜனநாயக உலகம் முழுவதிலும் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் அரசாங்க நிதியின் இறுதிப் பொறுப்புமிக்கதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் செயலாற்றம், நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய ஆண்டறிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களின் மீளாய்வுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஓர் அரசாங்கப் பொறுப்பு முயற்சி என்ற வகையில், கூட்டுத்தாபனம் பாராளுமன்றத்தின் - அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கும் - (COPE) பொறுப்புமிக்கதாகும்.

## ஊதியக் கொள்கை

கூட்டுத்தாபனத்தின் ஊதியக் கொள்கை பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் விதப்புரைகளின் பிரகாரம் வகுக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களின் படிகள் மற்றும் முன் நிபந்தனைகள் ஆகியவை பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட கூட்டுத்தாபனப் பணிப்பாளர்களின் படிகள் மற்றும் முன் நிபந்தனைகள் தொடர்பான பிரயோகிக்கத்தக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டுச் செலுத்தப்படுகின்றன.

ஊழியர்களின் சம்பளங்கள் பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் பொதுநிர்வாக சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படையில் செலுத்தப்படுகின்றன.

வெகுமதிகளை நேரடியாக செயலாற்றத்துடன் தொடர்புபடுத்துவதற்காக ஒரு செயலாற்ற ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

## உள்ளகக் கணக்காய்வு

கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பொருத்தமானவாறு அதிகாரம் அளிக்கப்படுவதையும் பதிவுசெய்யப்படுவதையும் அறிக்கை செய்யப்படுவதையும் நியாயமான அளவு உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் வகுக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைக் கூட்டுத்தாபனம் பேணுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உண்டு.

செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு நடைமுறையில் உள்ளது. திணைக்களங்கள் உற்பத்தி, தரக்கட்டுப்பாடு, பராமரிப்பு, நிதி, திட்டமிடல் மற்றும் வடிவமைப்பும் ஆராய்ச்சியும், அபிவிருத்திச் செயற்பாடுகள், சந்தைப்படுத்தல் போன்ற வரைவிலக்கணப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு திணைக்களத் தலைவரும் கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரியாகிய பொது முகாமையாளரிடம் நேரடியாக அறிக்கை செய்கின்றனர்.

பொது முகாமையாளர் முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் அறிக்கை செய்கின்றார்.

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டினால் பேணப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் நேரடியாக கூட்டுத்தாபனத் தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் அறிக்கை செய்யப்படுவதன் மூலம் உள்ளகக் கணக்காய்வளரின் சுயாதீனத்தன்மை வலுவூட்டப்படுகின்றது.

கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்காக கொள்வனவு நடவடிக்கைகளில் போட்டித்தன்மையான கேள்விப்பத்திர நடவடிக்கை முறை கூட்டுத்தாபனத்தினால் பேணப்படுவதன் மூலம் அக்கறையுள்ள தரப்புகளுக்கு சமமான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

மூலதனச் செலவின வரவு செலவுத் திட்டத்தை உள்ளடக்கிய வருடாந்த வரவு செலவுத் திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு சுகாதார மற்றும் நிதி அமைச்சுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

# எமது உற்பத்திக் கலவை

## இன ரீதியான உற்பத்தி அளவு - குளிகைகள் / கூட்டுக் குளிகைகள் மில்லியன் அலகுகளில்

| உற்பத்திகள் | அளவு மில்லியன் அலகுகள் | உற்பத்திகள் | அளவு மில்லியன் அலகுகள் |
|---|---|---|---|
| அலுமீனியம் ஐதரோ. குளிகை BP 500மிகி | 1.140 | போலிக் அசிட் குளிகை BP 1மிகி | 265.500 |
| அமொக்சிசிலின் குளிகை USP 125மிகி | 7.000 | பெமோரிடைன் குளிகைகள் USP 20மிகி | 71.550 |
| அமொக்சிசிலின் குளிகை BP 250மிகி | 235.234 | புரூஸ்மைட் குளிகை BP 40மிகி. | 42.000 |
| அமொக்சிசிலின் கூ.கு. BP 500மிகி. | 34.125 | கிளிக்ளசைட் குளிகை 80மிகி | 4.227 |
| அஸ்கோபிக் அசிட் குளிகை BP 100மிகி | 31.050 | இன்டோமெதசின் கூ.கு. 25மிகி. | 30.500 |
| அடனலொல் குளிகை BP 50 மிகி | 11.312 | லொசார்டன் பொட்டாசியம் குளிகை 50மிகி | 0.800 |
| பென்செக்சோல் குளிகை BP 2மிகி.. | 36.000 | மெபென்டசோல் குளிகை USP 500மிகி. | 0.640 |
| காபமெசபைன் குளிகை BP 200 மிகி | 42.000 | மெபென்டசோல் குளிகை USP 100மிக | 45.000 |
| குளொரம்பெனிகல் கூ.கு. BP 250மிகி. | 0.302 | மெற்போர்மின் குளிகை BP 500மிகி | 85.990 |
| குளோரோகுயின் பொஸ்பேற்று குளிகை BP 250மிகி. | 2.200 | பெரசெடமோல் குளி. BP 500மிகி | 206.400 |
| கிளிமெற்றிடைன் குளிகை B' 200மிகி | 4.160 | பெனொக்சி மெதைல் பெனிசிலின் குளிகை BP 250மிகி | 29.740 |
| குளொக்சசிலின் கூ.கு. BP 250மிகி | 103.600 | பெனொக்சி மெதைல் பெனிசிலின் குளிகை BP 125மிகி | 4.800 |
| குளொக்சசிலின் கூ.கு. BP 5000மிகி | 5.600 | பிரெட்னிசொலோன் குளிகை BP 5மிகி | 224.000 |
| கோட்றைமொக்சசோல் குளிகை BP 480மிகி (வளர்ந்தோர்) | 9.750 | புறாப்றனலோல் குளிகை BP 40மிகி | 16.000 |
| கிளாரித்ரோமைசின் குளிகைக 250மிகி | 0.139 | சல்பியூடமோல் குளிகை BP 2மிகி | 91.200 |
| டிக்ளொபெனெக் சோடியம் குளிகை USP 50மிகி | 88.400 | தியோபில்லைன் குளிகை ER USP 125மிகி | 37.433 |
| டைஎதைல் காபமைசீன் குளிகை BP 50மிகி | 16.200 | ட்றைபுளோபரைசின் குளிகை BP 5மிகி | 4.500 |
| டிலிடியாசம் HCL குளிகை 60மிகி | 36.000 | வெரபமில் குளிகை BP 40மிகி | 19.800 |
| எனலாப்பிறில் மெலியேற் குளிகை USP 5மிகி | 61.200 | விற்றிமின் B குளிகை ஊர்கு | 61.600 |
| எரித்ரோமைசீன் ஸ்ரியரேற் குளிகை BP250mg | 20.800 | விற்றமின் B கொம்பிளக்ஸ் காரமானது Tab. BPC | 14.000 |

**வெளியிடப்படவுள்ள உற்பத்திகள் - 2014**

- லெவோதைரொக்சின் குளிகைகள் BP 50 மைக்ரோ கிராம்
- எசோமெப்ரசோல் குளிகை BP 20மிகி
- லொசாட்டன் பொட்டாசியம் குளிகைகள் BP 50மிகி
- கிளரித்துரோமைசீன் குளிகைகள் USP 250மிகி
- மெற்றோனிடசோல் குளிகைகள் USP 200மிகி

# பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று

நிதியியல் கூற்றுகள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகள் கணக்காய்வாளரின் பொறுப்புகளிலிருந்து வேறுபடுகின்றன. அவை பற்றிய விபரம் 113-126ஆம் பக்கங்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ், ஓர் அரச கூட்டுத்தாபனமானது வருமானமும் செலவினங்களும் சொத்துகளும் பொறுப்புகளும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஏனைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணக்குகளைப் பேணுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அத்தகைய வடிவில் அத்தகைய விபரங்களைக் கொண்ட வருடாந்தக் கூற்றையும் கணக்குகளையும் ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனம் தயாரித்தல் வேண்டும்.

அரசாங்கத்தினதும் பங்கீடுபாட்டாளர்களினதும் சார்பாகத் தொழில் முயற்சியென்றை நடத்தும் நியதிச்சட்டப் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உண்டு. நியாயமான அளவு செம்மையாக கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையைக் காட்டுவதற்கும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்குவதற்கும் போதியளவு கணக்குப் பதிவுகளைப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கும் அவர்கள் பொறுப்புமிக்கவர்களாவதுடன் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே அடிப்படையைப் பணிப்பாளர்கள் தொடரந்தும் கடைப்பிடித்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும் இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு, உள்ளக சரிபார்த்தலும் நிதியியல் மீளாய்வுகளும், மோசடிகள் மற்றும் ஒழுங்கீனங்களைக் கண்டறிதல் என்பவை உள்ளிட்ட தகுந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் சமர்பபிக்கப்படுவதில் கவனம் செலுத்துவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் எ்ல்லா நிதியியல் பதிவுகள், அவை தொடர்பான தரவுகள் ஆகியவற்றுடன் பணிப்பாளர் சபையினால் கிடைக்கச் செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் யாவும் கணக்காய்வாளர் நாயகத்தினால் பரிசீலிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அபிப்பிராயம் இவ்வறிக்கையின் 113 - 126 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

## அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்
நிதியியல் நிலைமை பற்றிய கூற்று
2013.12.31இல் உள்ளவாறு
(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | குறிப்பு | **31.12.2013** ஆம் ஆண்டுக்கானது | **31.12.2012** ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துகள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் | 01 | 762,641,198 | 804,305,166 |
| கட்புலனாகாச் சொத்துகள் | 02 | 1,078,000 | 398,947 |
| ஏனைய நடைமுறை அல்லாத சொத்துகள் | 03 | 376,105 | 1,171,882 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை | | 935,067 | 33,827,229 |
| நடைமுறைச் சொத்துகள் | | | |
| இருப்புகள் | 04 | 561,248,472 | 647,559,566 |
| வியாபார மற்றும் ஏனைய வரவேண்டியவை | 05 | 493,222,377 | 293,373,713 |
| முன்கொடுப்பனவு | 06 | 36,045,173 | 5,980,156 |
| ஏனைய நிதிச் சொத்துகள் | 07 | 429,896,526 | 210,691,094 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 08 | 8,670,818 | 5,950,745 |
| | | 1,529,083,367 | 1,163,555,275 |
| மொத்த சொத்துகள் | | 2,294,113,736 | 2,003,258,498 |
| **உரிமை முதலும் பொறுப்புகளும்** | | | |
| அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் | | 850,000,000 | 850,000,000 |
| சொல்லப்பட்ட மூலதனம் | 09 | 690,079,000 | 690,079,000 |
| வைத்திருப்பு வருவாய் | | 1,247,527,043 | 1,059,925,592 |
| மொத்த உரிமை முதல் | | 1,937,606,043 | 1,750,004,592 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | |
| ஊழியர் பயன் பொறுப்புகள் | | 22,414,958 | 17,989,961 |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | 10 | 140,956,542 | 158,766,584 |
| நடைமுறைப் பொறுப்புகள் | | - | 14,263 |
| | | 163,371,500 | 176,770,807 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபாரமும் ஏனைய செலுத்தவேண்டியவையும் | 11 | 79,693,150 | 81,327,558 |
| செலுத்த வேண்டிய வரி | | 113,443,043 | (4,844,459) |
| | | 193,136,193 | 76,483,099 |
| நிகழ்சாத்தியப் பொறுப்பு | 12 | - | - |
| **மொத்த உரிமை முதலும் பொறுப்புகளும்** | | 2,294,113,736 | 2,003,258,498 |

இந்த நிதிக்கூற்றுகள் 2014. ஒக்டோபர் 02ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் சார்பாக பின்வருவோரால் ஒப்பமிடப்பட்டது:

தலைவர் : ........................................ பணிப்பாளர் : ........................................

திகதி : 03-10-2014

பிரதிப் பொது முகாமையாளர் - நிதி : ........................................

## அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

வருமானக் கூற்று
2013 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது
(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | குறிப்பு | 2013ஆம் ஆண்டுக்கானது | 2012 ஆம் ஆண்டுக்கானது மீள்கூற்று | 2012 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|---|
| வருமானம் | 13 | 1,941,182,950 | 1,414,546,985 | 1,414,546,985 |
| விற்பனை செலவுகள் | 14 | (1,513,899,412) | (1,196,065,869) | (1,220,523,214) |
| **மொத்த இலாபம்** | | 427,283,538 | 218,481,116 | 194,023,771 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 15 | 5,983,263 | 6,876,100 | 6,876,100 |
| நிர்வாகச் செலவுகள் | 16 | (106,096,193) | (106,847,406) | (82,390,062) |
| விற்பனை மற்றும் வினியோகச் செலவுகள் | 17 | (21,308,803) | (24,073,920) | (24,073,920) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 18 | (1,685,541) | (9,143,696) | (9,143,696) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | 304,176,264 | 85,292,193 | 85,292,193 |
| நிதிச்செலவு | 19 | (2,266,464) | (2,407,144) | (2,407,144) |
| நிதி வருமானம் | 20 | 28,059,081 | 34,251,670 | 34,251,670 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | 329,968,881 | 117,136,719 | 117,136,719 |
| வரிச்செலவுகள் | 21 | (120,814,029) | (18,575,538) | (18,575,538) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | 209,154,852 | 98,561,181 | 98,561,181 |

| முழுமையான வருமானக் கூற்று | 2013 ஆம் ஆண்டுக்கானது | 2012 ஆண்டுக்கான மீள்கூற்று | 2012 ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|---|
| **ஆண்டுக்கான இலாபம்** | 209,154,852 | 98,561,181 | 98,561,181 |
| (-) இடைக்காலப் பொறுப்பு | (486,083) | - | - |
| (-) பொறுப்புச் செலவு நட்டம் | (1,067,318) | - | - |
| ஏனைய முழுமையான வருமானம் மீதான வருமான வரி | - | - | - |
| ஆண்டுக்கான ஏனைய முழுமையான வருமானம் நிகர வரி | (1,553,401) | - | - |
| ஆண்டுக்கான மொத்த முழுமையான வருமானம் நிகர வரி | 207,601,451 | 98,561,181 | 98,561,181 |

## அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

உரிமை முதல் கூற்றில் மாற்றங்கள்
2013 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது
(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | கூறப்பட்ட மூலதனம் | இலாபம் மற்றும் நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|
| 01.01.2012 இல் உள்ளவாறு மீதி | 690,079,000 | 668,600,896 | 1,358,679,896 |
| ஆண்டுக்கான இலாபம் | - | 98,561,181 | 98,561,181 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | - |
| மொத்த முழுமையான வருமானம் | 690,079,000 | 767,162,077 | 1,457,241,077 |
| SLFRS திருத்தங்கள் | - | 312,763,516 | 312,763,516 |
| திறைசேரிக்கான பங்களிப்பு | - | (20,000,000) | (20,000,000) |
| **2012.12.31இல் உள்ளவாறு மீதி** | 690,079,000 | 1,059,925,592 | 1,750,004,592 |
| 2013.01.01இல் உள்ளவாறு மீதி | 690,079,000 | 1,059,925,592 | 1,750,004,592 |
| ஆண்டுக்கான இலாபம் | - | 209,154,852 | 209,154,852 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | (1,553,401) | (1,553,401) |
| மொத்த முழுமையான வருமானம் | - | 207,601,451 | 207,601,451 |
| திறைசேரிக்கான பங்களிப்பு | - | (20,000,000) | (20,000,000) |
| 2013.12.31இல் உள்ளவாறு மீதி | 690,079,000 | 1,247,527,043 | 1,937,606,043 |

## அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்
2013 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று
(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | 2013ஆம் ஆண்டுக்கானது | 2013ஆம் ஆண்டுக்கானது |
|---|---|---|
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/(நட்டம்) மற்றும் அசாதாரண இனங்கள் | 329,968,881 | 117,136,719 |
| **திருத்தங்கள் :** | | |
| அசையாச் சொத்துகளின் தேய்வு | 117,542,273 | 121,234,122 |
| நடைமுறை சேவை செலவினம் | 1,339,232 | (668,654) |
| ஐயக் கடன்களுக்கான மிகை ஏற்பாடு | - | (189,797) |
| வாகன கையுதிர்ப்பு இலாபம் | - | (1,025,000) |
| கையுதிப்பு இலாபம் / நட்டம் | 87,463 | - |
| பதிவழிக்கப்பட்ட கருவிகள் நட்டம் | 68,468 | - |
| சேதமடைந்தவை மற்றும் பயன்படுத்தாதவற்றுக்கான செலவு | 332,154 | 7,628,787 |
| பிற்போடப்பட்ட வருமானம் | (14,263) | (14,263) |
| வட்டி வருமானம் | (25,314,785) | (31,843,823) |
| **செயற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம்** | 424,009,423 | 212,258,091 |
| **செயற்படு மூலதன இனங்களில் மாற்றம்** | | |
| இருப்புகளில் (அதிகரிப்பு) / குறைவு | 86,311,094 | (162,626,615) |
| கடன் பெறுனர் மற்றும் பெறவேண்டியவற்றில் அதிகரிப்பு / (குறைவு) | (199,848,664) | (93,362,234) |
| வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு / (குறைவு) | (30,065,017) | 676,835 |
| பொறுப்புகளில் (அதிகரிப்பு) / குறைவு | (1,634,409) | 23,591,194 |
| **தொழிற்பாட்டிலிருந்து ஈட்டப்பட்ட காசு** | 278,772,427 | (19,462,729) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (315,240) | (501,605) |
| செலுத்தப்பட்ட வரி வருமானம் | (20,336,569) | (44,928,135) |
| தொழிற்பாட்டிலிருந்து ஈட்டப்பட்ட தேறிய காசு | 258,120,618 | (64,892,469) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| குறுகிய கால முதலீடு (குறிப்பு அ) | (218,013,466) | 123,546,348 |
| அசையாச் சொத்துகள் கொள்வனவு | (44,156,578) | (70,787,470) |
| விற்கப்பட்ட ஆதனங்களின் விற்பனை வருமானம் | 3,300 | 1,400,000 |
| பெற்ற வட்டி | 24,122,819 | 34,836,309 |
| ஊழியர் வட்டிச் செலவு | 1,847,604 | 1,869,526 |
| ஏனைய நடைமுறையல்லாத சொத்துகள் | 795,777 | (348,552) |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (235,400,545) | 90,516,161 |
| **நிதியீட்டச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| திறைசேரி பங்களிப்பு | (20,000,000) | (20,000,000) |
| நிதியீட்டச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு | (20,000,000) | (20,000,000) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை தேறிய (அதிகரிப்பு) / குறைவு | 2,720,073 | 5,623,692 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 5,950,745 | 327,053 |
| காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை (குறிப்பு ஆ) | 8,670,818 | 5,950,745 |

**குறிப்பு அ - முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்**

| | | |
|---|---|---|
| குறித்த காலப்பகுதியில் காசு உட்பாய்ச்சல் | 4,208,107,601 | 6,316,481,578 |
| குறித்த காலப்பகுதியில் காசு வெளிப்பாய்ச்சல் | (4,426,121,067) | (6,192,935,229) |
| தேறிய காசுப்பாய்ச்சல் | (218,013,466) | 123,546,348 |

குறிப்பு ஆ

| | | |
|---|---|---|
| காசும் காசுக்குச் சமமானவையும் | 299,207 | 1,012,942 |
| இலங்கை வங்கி - இரத்மலானை கிளை | 7,869,329 | 4,812,740 |
| இலங்கை வங்கி - தொகுதிக் கிளை | 167,870 | 85,469 |
| மக்கள் வங்கி - இரத்மலானை கிளை | 297,572 | 35,858 |
| மக்கள் வங்கி - தொகுதிக் கிளை | 26,840 | 3,385 |
| காசு மீதி | 10,000 | 351 |
| சில்லறைச் காசு | 8,670,818 | 5,950,745 |

# கூட்டிணைத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**1. கூட்டிணைத் தகவல்கள்**

**பொது**

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. அது இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை என்னும் முகவரியில் அமைந்துள்ள அரச கூட்டுத்தாபனமாகும்.

கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட 2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்

**பிரதான செயற்பாடுகள்**

அ) மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல், பதனிடல் களஞ்சியப்படுத்தல் பொதியிடல் மற்றும் மீள்பொதியிடல்

(ஆ) மருந்துப் பொருட்களின் உற்பத்திக்கும் பதனிடலுக்கும் தொழில்நுட்ப உதவி வழங்கல்

(இ) மருந்தியல் மற்றும் மருந்தாக்க ஆய்வுகளும் மருந்துகளின் தரமுயர்த்தலும்.

(ஈ) மருந்துப்பொருட்களின் சந்தைப்படுத்தல்

**2. தயார்படுத்தலின் அடிப்படை**

**2.1 இணங்கியொழுகுதல் பற்றிய கூற்று**

நிதிக்கூற்றுகள் இலங்கைபட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்டவாறு இலங்கை நிதியியல் அறிக்கை நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாகதயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2 அளவீட்டு அடிப்படை**

நிதிக்கூற்றுகள் வரலாற்று ரீதியான செலவினங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகள் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன.

**3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்**

**3.1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

மேந்தலைகளுக்கு இடையிலான ஒதுக்கீடுகள் 5.1.5 தவிர, கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தியவற்றை ஒத்தவையாகும்.

**3.1.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை ஆகுசெலவு, தேறிய திரண்ட தேய்வு மற்றும் திரண்ட செயலிழப்பு நட்டங்கள், ஏதேனும் இருப்பின், ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளன. அத்தகைய செலவினங்கள் ஆதனத்தின் பாகங்களின் கூறுகளைப் பதிலீடு செய்தல், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அங்கீகார தகவுதிறன்கள் ஈடுசெய்யப்பட்டிருப்பின், நீண்டகால நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான கடன் பெறல் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இடையிடையே ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் முக்கியமான பாகங்களைப் பதிலீடு செய்ய நேரிடின், கூட்டுத்தாபனம் பதிலீடு செய்யப்பட்ட பாகத்தை அங்கீகரிப்பதுடன் புதிய பாகத்தை அதன் சொந்த தொடர்பான பயன்பாட்டுக் காலம் மற்றும் தேய்மானத்துடன் அங்கீகரிக்கின்றது. அவ்வாறே, பாரிய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டால், அங்கீகரித்தல் தகவுதிறன்கள் ஈடு செய்யப்படின், ஒரு பதிலீடாக அதன் ஆகுசெலவு பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லும் தொகையுடன் அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய எல்லா திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் வருமானக் கூற்றில் கூறப்பட்டதாக அங்கீகரிக்கப்படுகின்றன.

**3.1.2 தேய்வு**

முழு ஆண்டுக்கான தேய்வு கொள்வனவு ஆண்டில் வழங்கப்படுவதுடன் நேர்கோட்டு அடிப்படையில் கையுதிர்த்த ஆண்டில் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் உத்தேச பயன்படு காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| குத்தகைக் காணி | குத்தகைக் காலத்தில் (99 வருடங்கள் |
| இயற்கை நிலக்காட்சியமைப்புச் செலவுகள் | குத்தகைக் காலத்தில் (99 வருடங்கள்) |
| கட்டிடங்கள் | 4 முதல் 30 வருடங்கள் |
| வாகனக் கொட்டில் | 4 வருடங்கள் |

| | |
|---|---|
| பொறிகள் மற்றும் இயந்திரங்கள | 1 முதல் 17 வருடங்கள |
| மோட்டார் வாகனங்கள் | 3 முதல் 14 வருடங்கள் |
| மோட்டார் சைக்கிள் | 5 வருடங்கள் |
| உபகரணங்கள | 2 முதல் 10 வருடங்கள் |
| கணினி உதிரிப்பாகங்கள் | 1 முதல் 5 வருடங்கள் |
| கணினி மென்பொருள் | 1 முதல் 5 வருடங்கள் |
| தளபாட பொருத்துக்கள் | 3 முதல் 10 வருடங்கள் |
| கருவிகள் | 1 முதல் 11 வருடங்கள் |
| நூலகப் புத்தகங்கள் | 5 வருடங்கள் |

### 3.1.3 அருவச் சொத்துகள்

பிரத்தியேகமாகக் கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துகள் ஆரம்ப அங்கீகார ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, அருவச் சொத்துகள் திரண்ட கடன் தீர்த்தல் மற்றும் திரண்ட சேத இழப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்து ஆகுசெலவில் கொண்டுசெல்லப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்தி ஆகுசெலவுகள் நீங்கலாக, உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட அருவச் சொத்துகள் மூலதனமாக்கப்படாது, செலவு உற்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில் செலவினம் பிரதிபலிக்கின்றது.

### 3.1.4 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சேதம்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி, வருடாந்தம் அல்லது கொண்டு செல்லும் பெறுமதி மீண்டும் பெற முடியாதது என நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் குறித்துக் காட்டும்போது மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய குறித்துக்காட்டல்கள் இருக்குமாயின், கொண்டு செல்லும் பெறுமதி உத்தேச அறவிடக்கூடிய தொகையை விஞ்சுமாயின், சொத்துகள் அறவிடக்கூடிய தொகை குறைத்து எழுதப்படுகின்றன. சேத இழப்புகள் அதே சொத்துக்கான முன்னைய மீள் மதிப்பீட்டு மிகையை வழங்காதவிடத்து வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.1.5 நிதி சாரா சொத்துகளின் சேதம்

ஒரு சொத்து சேதமடையலாம் என்பதற்கான குறிகாட்டிகள் தென்படுகின்றனவா என ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது. ஏதேனும் குறிகாட்டிகள் தென்படின், அல்லது ஒரு சொத்தின் வருடாந்த சேத மதிப்பீட்டுச் சோதனை தேவைப்படுத்தப்படும்போது, கூட்டுத்தாபனம் சொத்தின் பெறக்கூடிய தொகையை மதிப்பிடுகின்றது. ஒரு சொத்தின் பெறக்கூடிய தொகை ஒரு சொத்தின் காசை உருவாக்கும் அலகுகளில் (CGU) இருந்து விற்பனைக்கான ஆகுசெலவைக் கழித்து வரும் தொகையில் கூடியது என்பதுடன் பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதி ஏனைய சொத்துகளிலிருந்து அல்லது சொத்துகளின் தொகுதியிலிருந்து பெருமளவில் தங்கியிராத காசுப்பாய்ச்சலை சொத்து உருவாக்காதவிடத்து, ஒரு தனிப்பட்ட சொத்துக்கு நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி அல்லது CGU அதன் அறவிடக்கூடிய தொகையை விஞ்சுமிடத்து, அந்த சொத்து சேதமடைந்ததாகக் கருதப்பட்டு அதன் அறவிடக்கூடிய தொகைக்கு குறைத்து எழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடும்போது, பணத்தின் காலப் பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவு வீதம் மற்றும் சொத்துக்கான குறித்த இடர் ஆகியவற்றைப் பயன்படுத்தி உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலுக்கு கழிவு வழங்கப்படுகின்றது. விற்பனைக்காக ஆகுசெலவைக் கழித்து நியாய விலையை நிர்ணயிக்கையில், அண்மைக்கால சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பின் அவை கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் அடையாளம் காண முடியாதவிடத்து, ஒரு பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகின்றது.

### 3.1.6 வரி விதிப்பு

#### 3.1.6.1 நடைமுறை வரி விதிப்பு

நடைமுறை வரிச்சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தற்போதைய மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக வரி அறவிடும் அதிகாரிகளிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகளைக் கொண்டதாகும். தொகைகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியளவில் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது பெருமளவில் சட்டவாக்கம் செய்யப்பட்டவைகளாகும்.

அதன் பிரகாரம், வரி விதிப்புக்கான ஏற்பாடு 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க அரசிறைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின் பிரகாரம் வரி நோக்கங்களுக்காகத் திருத்தப்பட்டவாறாக அவ்வாண்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. நடைமுறை ஆண்டின் வரி விதிப்புக்கான ஏற்பாடு சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்துக்கு அமைவாக கணக்கீட்டு இலாபத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.1.6.2 தாமதித்த வரி விதிப்பு

நிதியியல் நிலைமையில் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு வகையான தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக, தாமதித்த வரிப் பொறுப்பு மற்றும் சொத்துகளை நாம் கவனத்தில் கொண்டோம். எமது நிதிக் கூற்றில், ஓய்வு பெறல் பணிக்கொடை ஏற்பாட்டுக்காக நிலையான சொத்துகள் மற்றும் தாமதித்த வரிச் சொத்து ஆகியவற்றுக்கான புத்தக மற்றும் வரி குறைத்து எழுதப்பட்ட தாமதித்த வரிப்பொறுப்பை நாம் பிரதானமாக அங்கீகரித்தோம். தாமதித்த வரிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை வருமான வரி வீதத்தில் அளவிடப்படுகின்றன.

### 3.2 சரக்கிருப்புகள்

"முதலில் வந்து முதலில் செல்பவை" என்னும் அடிப்படையில் மதிப்பிடப்படும் உபயோகத்தில் இல்லாத மற்றும் மெதுவாக விற்பனையாகும் பொருட்களுக்கான உரிய தொகையை ஒதுக்கிய பின்னர் ஆகுசெலவினம் மற்றும் தேறிய அங்கீகரிக்கக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதோ அதில் சரக்கிருப்புகள் மதிப்பிடப்படுகின்றன.

### 3.2.1 சரக்கிருப்புகளின் அளவீடு

சரக்கிருப்புகளின் ஆகு செலவு

**மூலப்பொருட்கள்**

ஏதேனும் இடைநேர்விளைவான செலவினங்களுடன் ஆகுசெலவுகள்

**நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை**
மூலப்பொருட்களின் ஆகு செலவு மற்றும் உற்பத்திச் செலவினங்கள் முழுமையாக.

**முடிவுப் பொருட்கள்**
மூலப்பொருட்களின் ஆகு செலவு மற்றும் வேறுபடக்கூடிய உற்பத்திச் செலவினங்கள் முழுமையாக.

**ஏனைய இருப்புகள்**
ஆகு செலவு நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

### 3.2.2 வியாபாரம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாய விலையிலும் அதனைத் தொடர்ந்து பயனுறுதியான வட்டி வீத முறையைப் பயன்படுத்தி சேதங்களுக்கான ஏற்பாடுகளைக் கழித்து கடன் தீர்த்தல் செலவினத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. 2013.12.31இல் உள்ளவாறு நீண்ட கால நிலுவைகள் எதுவும் இல்லாததால், வர்த்தகக் கடன்பட்டோருக்கு எவ்விதமான சேதங்களையும் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்யவில்லை.

### 3.2.3 காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

### 3.2.4 தொடர்பான தரப்பு கொடுக்கல் வாங்கல்கள்

#### 3.2.4.1 பணிப்பாளர் சபையின் நட்ட ஈடு

**அரசு மற்றும் அரசு தொடர்பான அமைப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்கள்**

கூட்டுத்தாபனம் அதன் சாதாரண தொழிற்பாட்டு நடவடிக்கைகளில், தொடர்பான தரப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது. தொடர்பான தரப்புகள் என்பது இலங்கை அரசாங்கம் (கூட்டுத்தாபனத்தின் இறுதியான உரிமையாளர் அரசாங்கம் என்ற வகையில்) பல்வேறு அரச திணைக்களங்கள், அரச கட்டுப்பாட்டு அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட்டாக முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆனால் தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் அல்லாதவையுமான அரச மற்றும் அரச கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஒழுங்குகளின் விபரம் பின்வருமாறு:

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | 2013 | 2012 |
|---|---|---|
| **கொடுக்கல் வாங்கல்** | | |
| இலங்கை அரசாங்கப் பிணையங்களில் | | |
| கூட்டுத்தாபன முதலீடு | 429,896,526 | 210,691,094 |
| இவ்வாண்டில் அரசாங்கத்துக்குச் செலுத்திய மிகை | 20,000,000 | 20,000,000 |
| விற்பனைகள் | 529,050,518 | 412,413,224 |
| **நிலுவையாக உள்ள மீதி** | | |

| | | |
|---|---|---|
| SPC இடமிருந்து பெறவேண்டியவை | 1,296,680 | 54,405,818 |
| DHS இடமிருந்து பெறவேண்டியவை | 404,315,959 | 217,151,210 |

**3.2.5 மூலதனம்**

2013 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டில் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

**3.2.6 நிதியியல் நிலைமைக் கூற்றுத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்**

நிதியியல் கூற்றுத் திகதிக்குப் பிந்திய எல்லா மூலப்பொருள் சார்ந்த நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு அவசியமானவிடத்து நிதியியல் கூற்றில் பொருத்தமான திருத்தங்களும் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.2.7 ஆய்வுச் செலவு**

புதிய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப அறிவையும் புரிந்துணர்வையும் பெறும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுச் செயற்பாடுகள் மீதான செலவினம் ஏற்படுகின்றபோது அது இலாபம் அல்லது செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**4 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்**

**4.1 ஓய்வுப்பயன் கடப்பாடு**

**4.1.1 வரைவிலக்கணம் செய்யப்பட்ட பயன் திட்டம் - ஓய்வூதியப் பணிக்கொடை**

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கூட்டுத்தாபனம் பணிக்கொடையைச் செலுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. ஓர் ஊழியர் கூட்டுத்தாபனத்தில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சேவையாற்றும்போதுதான் அவருக்குப் பணிக்கொடை செலுத்த வேண்டிய பொறுப்பு எழுகின்றது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக, நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு ஏற்பாடு முன் கொண்டு செல்லப்படுகின்றது. அதன் விளைவாக ஏற்படும் வருட ஆரம்பத்தில் முன் கொண்டுவரும் ஏற்பாட்டுக்கும் வருட இறுதியில் முன் கொண்டு செல்லும் ஏற்பாட்டுக்கும் இடையிலான வேறுபாடு தொடர்பாக வருமானக்கூற்றில் குறிப்பிடப்படுகின்றது.

**கணிப்பீடுகளில் பயன்படுத்தப்பட்டபிரதான ஊகங்கள் பின்வருமாறு:**

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| எதிர்பார்க்கப்படும் வருடாந்த சராசரி சம்பள உயர்வு | - | 4.00% | 3.80% |
| கழிவு வீதம் / வட்டி வீதம் | - | 10.00% | 10.90% |
| பணியாளர் புரள்வுக் காரணி | - | 2.03% | 3.13% |

பொறுப்புகளுக்கு புற நிதியிடல் மேற்கொள்ளப்படுவதில்லை. இந்த விடயம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் குழுவாக்கப்பட்டுள்ளது.

**4.1.2 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்குத் தகுதியான எல்லா ஊழியர்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் உரிய பங்களிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவாகக் காட்டப்பட்டுள்ளன.

**4.1.3 வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள்**

வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாய விலையில் மதிக்கப்பட்டு அதன் பின்னர் பயனுறுதியான வட்டி வீத முறையிலிருந்து சேதத்துக்கான இழப்பைக் கழித்தல் முறையைப் பயன்படுத்தி கடன் தீர்த்த செலவில் அளவிடப்படுகின்றன. 2013.12.31இல் முக்கிய தாக்கம் உள்ளவாறு ஏதேனும் அதனைத் தொடர்ந்த அளவிடப்பட்ட செலவினத்துக்கு கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை.

**4.1.4 ஏற்பாடு**

**பொது**

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது நெருக்குதலான) கூட்டுத்தாபனம் கொண்டுள்ள போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதரப் பயனைக் கொண்ட வளத்தின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுத்தப்படலாம். கடப்பாட்டுத் தொகையிலிருந்து நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படலாம். ஏற்பாடுகளில் சில அல்லது எல்லாம் மீளளிப்புச் செய்யப்படவேண்டும் என கூட்டுத்தாபனம் எதிர்பார்க்குமிடத்து, உதாரணமாக ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ், மீளளிப்பு நடைமுறையில் நிச்சயமாக உள்ள போது மட்டுமே அது பிரத்தியேகமான சொத்தாகக் கருதப்படுகின்றது. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினம் வருமானக் கூற்றில் இடம்பெறுகின்றது.

பணத்தின் நேரப் பெறுமதி முக்கியமாயின், பொருத்தமானவிடத்து, பொறுப்புக்கான குறித்த இடர்களைப் பிரதிபலிக்கும் தற்போதைய வரிக்கு முந்திய வீதத்தைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவு வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கழிவு வழங்கல் பயன்படுத்தப்படும்போது, காலப்போக்கில் ஏற்படும் ஏற்பாட்டின் அதிகரிப்பு நிதிச்செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**5 வரிக்கூற்று**

வருமானக் கூற்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக, செலவுகள் முறைமை செயற்பாடு கூட்டுத்தாபனத்தின் செயலாற்றக் கூறுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதனால், அம்முறை கையாளப்படுகின்றது.

**5.1.1 புரள்வு**

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் புரள்வு சுகாதார சேவைகள் திணைக்களம், அரசாங்க மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கான விற்பனைகளுடன் ஏற்றுமதிகளையும் உள்ளடக்குகின்றது.

**5.1.2 வருமானத்தை அங்கீகரித்தல்**

கொடுப்பனவுகள் எப்போது மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொருட்படுத்தாது பொருளாதாரப் பயன்கள் கூட்டுத்தாபனத்துக்கு உட்பாய்வதுடன் வருமானத்தை நம்பத்தகுந்தவாறு அளவிட முடியும் என்பது சாத்தியமானதாகும் என்னும் அளவுக்கு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்த ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொடுப்பனவு நியதிகள் மற்றும் வரிகள் அல்லது தீர்வைகளைக் கழித்து, பெற்ற அல்லது பெறக்கூடிய நியாயப் பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது. வருமானம் பிரதானமாகவா அல்லது செயலாண்மையாகவா செயற்படுகின்றது என்பதை நிர்ணயிப்பதற்காக கூட்டுத்தாபனம் அதன் வருமான ஒழுங்குகளை குறித்த தகவுதிறன்களுக்கு எதிராக மதிப்பிடுகின்றது. அதன் எல்லா வருமான ஒழுங்குகளிலும் அது பிரதானமாகச் செயற்படுகின்றது என கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. வருமானத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்த அங்கீகார தகவுதிறன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**பொருட்களின் விற்பனை**

குறிப்பிடத்தக்க இடர்களும் உரிமை வழங்குதலும் வழக்கமாக பொருட்களை வழங்கியதும் கொள்வனவாளரைச் சேர்ந்தடைந்ததும் பொருட்களின் விற்பனை வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**5.1.3 செலவுகள்**

வணிகத்தை நடத்துவதில் கூறப்படும் எல்லா செலவுகளும் ஆண்டுக்கான இலாபத்தை வந்தடைந்ததும் வருமானத்தில் சாட்டப்படுகின்றது.

**5.1.4 செலவினங்களுக்கு நிதியிடல்**

நிதிச் செலவுகள் வங்கி மேலதிகப்பற்று வட்டி, நாணயப்பத்திர ஆரம்பச் செலவுகள் மற்றும் கடன் வசதி உடன்படிக்கைக் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**5.1.5 மேந்தலைகளுக்கிடையிலான ஒதுக்கீடு**

நிதிக்கூற்றுகளில், மேந்தலை ஒதுக்கீட்டு முறைமை பின்வருமாறு:

**செலவுகள்**

(அ) வீதங்கள் மற்றும் வரிகள், மின்சாரம், நீர்க்கட்டணங்கள்,

(ஆ) காப்புறுதி, கருவிகளின் பராமரிப்பு – பொது, பராமரிப்பு – கட்டிடம், தேய்வு

(இ) சுகாதாரக் காப்புறுதித் திட்டத்தின் காப்புறுதி, பணியாளர் சேமநலன், சீருடை மற்றும் சப்பாத்துகள், போக்குவரத்துக் கட்டணங்கள்

(ஈ) பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள், ஏனைய ஊக்குவிப்புகள், மோட்டார் வாகன திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு,

வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள், தபால் செலவுகள் மற்றும் தொலைநகல், தொலைபேசிக் கட்டணங்கள், பாதுகாப்புக் கட்டணங்கள், வாகனங்கள் மற்றும் மருந்துகளுக்கான உரிமக் கட்டணங்கள், அச்சிடல் மற்றும் காகிதாதிகள், அலுலகச் செலவுகள், கணக்காய்வுக் கட்டணம், வாடகைக் கட்டணங்கள், விளம்பரங்கள், வர்த்தகம், மற்றும் பருவ இதழ்களுக்கான சந்தா, சட்ட மற்றும் விசாரணைச் செலவுகள், தொழில்சார் கட்டணங்கள், கழியாட்டம், வருடாந்த சந்தா, வருடாந்த மகாநாடுகள் மற்றும் கூட்டங்கள், முத்திரைக் கட்டணம், காகிதாதிகள், இருப்பெடுப்பு சீராக்கல்.

(உ) பணியாளர் பயன்களும் ஏனைய செலவினங்களும்

**ஒதுக்கீட்டு முறைமை**

(அ) பொதுவான உண்மையான செலவினம் உற்பத்திக்கும் நிர்வாகத்துக்கும் 70% மற்றும் 30% என்னும் அடிப்படையில் பங்கிடப்படுகின்றது.

(ஆ) செலவினம் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பங்கிடப்படுகின்றது.

(இ) உண்மையான செலவு முறைமை பயன்படுத்தப்படுகின்றது

(ஈ) உண்மையான செலவு முறைமை பயன்படுத்தப்படுகின்றது

(உ) உண்மையான செலவு முறைமை பயன்படுத்தப்படுகின்றது

**6. நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப அங்கீகாரமும் அதனைத் தொடர்ந்த அளவீடும்**

**6.1 நிதியியல் சொத்துகள்**

**6.1.1 ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்**

LKAS 39இன் நோக்கெல்லையினுள் வரும் நிதியியல் சொத்துகள் இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள், முதிர்ச்சி வரை வைத்திருக்கும் முதலீடுகள் மற்றும் விற்பனைக்காக வைத்துள்ள நிதியியல் சொத்துகள், ஆகியவற்றின் ஊடாக பொருத்தமானவாறும் ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தல் நிர்ணயிக்கின்றவாறும் நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா நிதிச் சொத்துகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியிலும் நியாயப் பெறுமதியில் இல்லாத சொத்துகளைப் பொறுத்தவரை, நேரடியாக கொடுக்கல் வாங்கல் செலவுக்கு ஏற்றிக் கூறக்கூடிய இலாபம் அல்லது நட்டம் ஊடாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன..

கூட்டுத்தாபனத்தின் நிதிச் சொத்துகள் காசு மற்றும் குறுகிய கால திறைசேரி உண்டியல் முதலீடு, வர்த்தகம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், பணியாளர் கடன்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளை உள்ளடக்கும்.

**6.1.2 அடுத்துவரும் அளவீடு**

நிதிச்சொத்துகளின் அடுத்துவரும் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலைப் பொறுத்துள்ளது.

**6.1.3 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் நிதிச் சொத்துகள்**

வியாபாரத்துக்காக வைத்திருக்கும் நிதிச்சொத்துகள், இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் ஆரம்ப அங்கீகாரத்தின் மீதமைவாக ஒதுக்கப்பட்ட நிதிச் சொத்துகள் ஆகியவற்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் நிதிச்சொத்துகள் உள்ளடக்கும். நிதிச்சொத்துகள் அண்மையில் விற்பதற்காக அல்லது மீள்கொள்வனவுக்காக கொள்வனவு செய்யப்படின், வியாபாரத்துக்காக வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்படும்.

**6.1.4 கடன்களும் பெறவேண்டியவைகளும்**

கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் செயலூக்க சந்தை ஒன்றில் விலை கூறப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடனான வழிவராத நிதிச்சொத்துகளாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அத்தகைய நிதிச்சொத்துகள் பயனுறுதியான வட்டி வீத முறைமையைப் (EIR) பயன்படுத்தி கடன் தீர்த்த செலவில் அதனைத் தொடர்ந்து அளவிடப்பட்டு அதில் இருந்து சேதத்தைக் கழித்து வருபவையாகும். கடன் தீர்த்த செலவினம் கொள்வனவு மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணத்துடன் EIRஇன் ஒருங்கிணைந்த பகுதியாகிய கட்டணம் அல்லது செலவினங்களைக் கவனத்தில் கொண்டு கணிக்கப்படுகின்றது. EIR கடன் தீர்த்தல் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சேதத்திலிருந்து எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் நிதிச்செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**6.1.5 முதிர்ச்சி வரை வைத்திருக்கும் முதலீடுகள்**

நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளுடனான வழிவராத நிதிச்சொத்துகள்

கூட்டுத்தாபனம் சாதகமான நோக்கத்தையும் முதிர்ச்சிவரை அதனை வைத்திருக்கும் ஆற்றலையும் கொண்டிருக்கும் போது முதிர்ச்சி வரை வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடுகள் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி சேதத்தைக் கழித்து கடன் தீர்த்த செலவினத்தில் அளவிடப்படுகின்றன. கடன் தீர்த்த செலவினம் கொள்வனவு மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணத்துடன் EIRஇன் ஒருங்கிணைந்த பகுதியாகிய கட்டணம் அல்லது செலவினங்களைக் கவனத்தில் கொண்டு கணிக்கப்படுகின்றது. EIR கடன் தீர்த்தல் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சேதத்திலிருந்து எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் நிதிச்செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது. 2012, 2011 மற்றும் 2010 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுகளில் கூட்டுத்தாபனம் முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

### 6.1.6 விற்பனைக்காக கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள்

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள் உரிமைப்பங்கு மற்றும் கடன் பிணையங்களை உள்ளடக்கியதாகும். விற்பனைக்காகக் கிடைக்கக்கூடியவையாக வகைப்படுத்தப்பட்ட உரிமைப்பங்கு முதலீடுகள் வியாபாரத்துக்காக வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்பட்டவையோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் ஒதுக்கப்பட்டவையோ அல்ல. இந்த வகுதியைச் சேர்ந்த கடன் பிணையங்கள் நிச்சயமற்ற ஒரு காலப்பகுதிக்கு வைத்திருப்பதற்குக் கருதப்பட்டவையும் திரவத்தன்மைத் தேவைகளுக்கு பதில் நடவடிக்கையாக அல்லது சந்தை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கான பதில் நடவடிக்கையாக விற்கக்கூடியவையாகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதலீடு அங்கீகரிக்கப்படாத வரை விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்தில் ஏனைய பூரண வருமானமாக அங்கீகரிக்கப்படாத வருமானங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்ந்து நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படும் வேளையில், திரண்ட இலாபம் அல்லது நட்டம் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் அவ்வேளையில், திரண்ட நட்டம் நிதிச் செலவில் வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்டு விற்பனைக்காக கிடைக்கக்கூடிய ஒதுக்கத்திலிருந்து அகற்றப்படுகின்றது. விற்பனைக்காகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி கணிக்கப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் நிதிச் சொத்துகளை அண்மித்த காலத்தில் விற்பனை செய்வதற்கான ஆற்றல் மற்றும் நோக்கம் தற்போதும் பொருத்தமானதா என நிர்ணயிப்பதற்கு கூட்டுத்தாபனம் அதனை மதிப்பிடுகின்றது. செயலூக்கமற்ற சந்தை காரணமாக கூட்டுத்தாபனம் இந்த நிதிச் சொத்துகளை விற்பனை செய்ய முடியாதுள்ளபோதும் அவ்வாறு செய்வதற்கான முகாமைத்துவத்தின் தீர்மானம் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் கணிசமான அளவு மாறுகின்ற போதும் கூட்டுத்தாபனம் அரிதான சூழ்நிலைகளில் இந்த நிதிச் சொத்துகளை மீள்வகைப்படுத்துதற்கு தீர்மானிக்கலாம். நிதிச் சொத்துகள் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் வரைவிலக்கணங்களை ஈடுசெய்கின்றபோதும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலம் வரை அல்லது முதிர்ச்சி வரை இந்தச் சொத்துகளை வைத்திருப்பதற்கு கூட்டுத்தாபனம் நோக்கத்தையும் ஆற்றலையும் கொண்டுள்ளபோதும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளை மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் நிதிச் சொத்துகளை வைத்திருப்பதற்கான ஆற்றலையும் நோக்கத்தையும் நிறுவனம் கொண்டுள்ள போது மட்டும் முதிர்ச்சி வரை வைத்திருக்கும் வகுதியை மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது.

நிதிச் சொத்துகள் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் வகுதிக்கு வெளியில் மீள்வகைப்படுத்துவதற்கு உரிமைப்பங்கில் அங்கீகரிக்கப்பட்ட அந்தச் சொத்து மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டம் EIRஐப் பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டத்துக்கு தீர்க்கப்படுகின்றது. புதிய கடன் தீர்த்த செலவினத்துக்கும் எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடும் EIRஐப் பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய காலப்பகுதியில் தீர்க்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து அந்த சொத்துகள் சேதமானவை என நிர்ணயிக்கப்படின், உரிமைப்பங்கில் பதிவு செய்யப்பட்ட தொகை வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படுகின்றது. 2012 மற்றும் 2011 டிசம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற ஆண்டில் விற்பனைக்காகக் கிடைக்கும் ஏதேனும் நிதி முதலீடுகளை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை.

### 6.1.7 அங்கீகரிக்காது விடல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச்சொத்து (அல்லது நிதிச்சொத்தொன்றின் ஒரு பாகம் அல்லது ஒத்த நிதிச்சொத்தின் குழுவொன்றின் ஒரு பாகம்) அங்கீகரிக்கப்படுவதில்லை:

i). சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமை காலாவதியாதல்.
ii). கூட்டுத்தாபனம் சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்காக அதன் உரிமைகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ‘கடந்து செல்லல்’ ஏற்பாட்டின் கீழ் ஒரு மூன்றாம் தரப்புக்கு சாதன தாமதம் இன்றி காசுப்பாய்ச்சலை முழுமையாகப் பெறுவதற்கு பெற்ற காசைச் செலுத்துவதற்கான கடப்பாட்டை ஆரம்பித்தல். அத்துடன்,

(அ) கூட்டுத்தாபனம் கணிசமான அளவில் சொத்தின் எல்லா இடர்களையும் வெகுமதிகளையும் மாற்றிக்கொடுத்தல், அல்லது
(ஆ) கூட்டுத்தாபனம் கணிசமான அளவில் சொத்தின் எல்லா இடர்களையும் வெகுமதிகளையும் மாற்றிக்கொடுக்காமலும் வைத்திருக்காமலும் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றிக் கொடுத்தல்.

### 6.1.8 நிதிச் சொத்துகளின் சேதம்

கூட்டுத்தாபனம் ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் குழு உண்மையாகவே

சேதமடைந்துள்ளதா என்பதை மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக சேதத்துக்கான உண்மையான சான்று இருப்பதுடன் அந்த இழப்புச் சம்பவம் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துகளின் குழுவின் உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலின் மீது தாக்கத்தைக் கொண்டிருந்தால் மட்டுமே ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்தின் குழு சேதமடைந்ததாகக் கருதப்படும்.

கடனாளிகள் அல்லது கடனாளிகளின் ஒரு குழு கணிசமான நிதிப் பிரச்சினைகளை அனுபவித்தல், வட்டி அல்லது கடன் கொடுப்பனவில் தவணை தவறுதல் அல்லது நெறி பிறழ்தல், அவர்கள் வங்குரோத்து நிலைக்கு அல்லது ஏனைய நிதியியல் மீள் ஒழுங்கமைப்புக்கு உட்படுவார்கள் என்னும் சாத்தியம் மற்றும் தவணை தவறுதலுடன் தொடர்பான நிலுவைகளில் மாற்றம் அல்லது பொருளாதார நிலைமைகள் போன்ற உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சலில் அளவிடக்கூடிய குறைவு ஆகியவற்றை அவதானிக்கக்கூடிய தரவுகள் குறித்துக் காட்டுதல் போன்ற குறிகாட்டிகளை சேதத்துக்கான சான்றுகள் உள்ளடக்கலாம்.

### 6.1.9 கடன் தீர்த்த செலவில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகள்

கடன் தீர்த்த செலவில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகளைப் பொறுத்தவரை, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச் சொத்துகள் அல்லது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்லாத நிதிச் சொத்துகளுக்கான உண்மையான சான்றுகள் உள்ளனவா என கூட்டுத்தாபனம் மதிப்பிடும். முக்கியத்துவம் வாய்ந்தவையாயினும் இல்லாவிடினும், தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கான சேதத்துக்கு உண்மையான சான்று எதுவும் இல்லை என கூட்டுத்தாபனம் நிர்ணயித்தால், அது ஒத்த கடன் இடர் தன்மைகளுடனான நிதிச் சொத்தின் குழு ஒன்றை உள்ளடக்குவதுடன் அவற்றை சேதத்துக்காக கூட்டாக மதிப்பிடும். சேதத்துக்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துகளில் சேத இழப்பு இருப்பின் அல்லது தொடர்ந்து காணப்படுவதாக அங்கீகரிக்கப்படின், அவை சேதத்துக்கான கூட்டான மதிப்பீட்டில் உள்ளடக்கப்படமாட்டாது.

சேத இழப்பு கூறப்பட்டுள்ளதாக உண்மையான சான்றுகள் காணப்படுமாயின், இழப்பின் அளவு சொத்துகள் கொண்டு செல்லும் தொகைக்கும் உத்தேச எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக அளவிடப்படும். (இற்றை வரை கூறப்படாத எதிர்பார்க்கப்படும் எதிர்கால கடன் இழப்புகள் நீங்கலாக). உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதையப் பெறுமதி நிதிச்சொத்தின் ஆரம்ப பயனுறுதியான வட்டி வீதத்தில் கழிவாக்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனம் ஒவ்வொரு கடன் வகுதிக்குமான குறித்த சேத மதிப்பீட்டை மேற்கொள்கின்றது.

**அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 2013 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புகள் (எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)**

## 2013

கிரயம்

| விபரம் | 2013.12.31இல் உள்ளவாறு கிரயம் | இவ்வாண்டின் கொள்வனவு | இவ்வாண்டின் கையுதிர்ப்பு | 2013.01.01இல் உள்ளவாறு மீதி | சேதமடைந்தவை பாவிக்காதவை சீராக்கம் | 2013.01.01இல் உள்ளவாறு பயன்படுத்தாதவை சீராக்கம் |
|---|---|---|---|---|---|---|
| தேய்வடையக்கூடிய சொத்துகள் | | | | | | |
| குத்தகைக் காணி | 4,920,845 | - | - | 4,920,845 | - | 4,920,845 |
| நிலக்காட்சியமைப்புச் செலவு | 6,113,388 | - | - | 6,113,388 | - | 6,113,388 |
| கட்டிடம் | 343,915,599 | 41,928,531 | - | 385,844,130 | - | 385,844,130 |
| வாகனம் நிறுத்தும் கொட்டில் | 1,170,063 | - | - | 1,170,063 | - | 1,170,063 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 647,702,109 | 19,865,660 | (1,231,000) | 666,336,769 | (16,205,633) | 650,131,136 |
| மோட்டார் வாகனங்கள் | 44,046,800 | 8,150,000 | - | 52,196,800 | - | 52,196,800 |
| மோட்டார் சைக்கிள் | 100,000 | - | - | 100,000 | - | 100,000 |
| உகரணங்கள் | 120,892,137 | 3,292,505 | (8,750) | 124,175,892 | (1,796,329) | 122,379,563 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 8,316,310 | 512,030 | (112,920) | 8,715,420 | (276,025) | 8,439,395 |
| தளபாட பொருத்தனைகள் உபகரணங்கள் | 18,507,862 | 2,316,598 | (3,025) | 20,821,435 | (177,925) | 20,643,510 |
| சைக்கிள்கள், கார்கள் | 31,987 | - | - | 31,987 | - | 31,987 |
| கருவிகள் | 7,971,054 | - | (174,574) | 7,796,480 | (70,850) | 7,725,630 |
| நூலக நூல்கள் | 63,069 | - | - | 63,069 | - | 63,069 |
| முழுமையாக தேய்ந்த சொத்துக்கள் | | | | | | |
| நூலக நூல்கள் | 2,435,973 | - | - | 2,435,973 | - | 2,435,973 |
நிதிக்கூற்றுக்களானவை இலங்கை அரசாங்க மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு | பெறுமதி சேர் வரிக்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்படாத கம்பனியொன்றிற்கு அவ்வரி செலுத்தப்படக் கூடாத போதிலும், அவ்வாறு பதிவு செய்யப்படாத கம்பனியொன்றுக்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 64,680 பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | நிதி, திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரம் இல்லாமல் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் நன்கொடைகள் மற்றும் அனுசரணைக் கொடுப்பனவுகளாக அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு 3 சந்தர்ப்பங்களில் ரூபா 1,300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

AGDSL

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | |
|---|---|
| (இ) 2000 ஜனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக மீளாய்வாண்டிற்காக ஊழியர்களுக்காக உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 1,018,647 தொகை கூட்டுத்தாபன நிதியங்களிலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. இப்பணத்தை ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத போதிலும், 2014 ஆகஸ்ட் மாதத்திலிருந்து வரித் தொகையை ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) 2006 மார்ச் 09 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ4/10/090/2 ஆம் இலக்க திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் சுகாதார செயலாளருக்கு தொடர்புபடுத்தப்பட்ட கடிதம் | |
| (i) பந்தி இலக்கம் 02-01 | நிறைவேற்று தரம் மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத சகல உத்தியோகத்தர்களுக்கும் தூர அளவின் பிரகாரம் தீர்மானித்து போக்குவரத்துப் படியினை செலுத்த வேண்டிய போதிலும், ஒவ்வொரு ஊழியருக்கும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை மாதாந்தம் முறையே ரூபா 4,700 மற்றும் ரூபா 3,000 வீதம் நிலையான போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) பந்தி இலக்கம் 02-01(1) | கூட்டுத்தாபனத்தினால் போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள வீதிகளுக்கு அருகாமையில் குடியிருக்கும் ஊழியர்களுக்கும் போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) பந்தி இலக்கம் 02-02 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2011 யூலை 01 ஆந் திகதி முதல் தலைவர் தவிர்ந்த அனைத்து பதவியணியினருக்கும் மாதாந்தம் ரூபா 12,000 வீதம் உற்பத்தி ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 218 பதவியணியினருக்கு செலுத்தக்கூடிய உச்ச உற்பத்தி |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

ஊக்குவிப்பு படி ரூபா 10,464,000 ஆக இருந்த போதிலும், ரூபா 18,707,055 தொகை செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அண்ணளவாக ரூபா 8,243,055 தொகையான உற்பத்தி ஊக்குவிப்புப் படி கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

------------------------

### 3.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 329,968,881 ஆன தேறிய இலாபமொன்றானதுடன், அது முன்னைய ஆண்டிற்கான வரிக்குப் முன்னரான தேறிய இலாபமான ரூபா 117,136,719 உடன் ஒப்பிடுகையில் ரூபா 212,832,162 அதிகரிப்பொன்று தென்பட்டது. எவ்வாறாயினும், திறைசேரி உண்டியல்களிற்காக கிடைத்திருந்த ரூபா 25,314,785 தொகையான வட்டி வருமானம் அடங்கலாக ரூபா 28,059,081 ஆன செயற்பாடற்ற வருமானத்தினைக் கணக்கிலெடுக்க முன்னர் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம் ரூபா 301,909,800 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 34,251,670 தொகையான செயற்பாடற்ற வருமானத்தினைக் கணக்கிலெடுக்க முன்னரான தேறிய இலாபம் ரூபா 82,885,049 ஆக இருந்தது. இதன் பிரகாரம் செயற்பாடற்ற வருமானத்தைக் கணக்கிலெடுக்க முன்னரான தேறிய இலாபத்தினை முன்னைய ஆண்டின் செயற்பாடற்ற வருமானத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 219,024,751 ஆல் அதாவது 264.3 சதவீதமான அதிகரிப்பொன்றைக் காட்டியது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் மொத்த இலாப விகிதமான 22.0 சதவீதத்தை 2012 ஆம் ஆண்டின் மொத்த இலாபமான 15.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 42.8 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டியது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் தேறிய இலாப விகிதமான 10.7 சதவீதத்தை 2012 ஆம் ஆண்டின் தேறிய இலாபமான 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 52.9 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டியது.

(இ) 2013 ஆம் ஆண்டின் நடைமுறை விகிதம் 7.9 மற்றும் விரைவு விகிதம் 5.9 ஆக இருந்தமை மிகை தொழிற்படு மூலதனம் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் கடன்பட்டோர் புரள்வு விகிதத்தின் பின்னடைவு 1.1 ஆகக் காணப்பட்டதுடன் கடன் சேகரிப்புக் காலம் 19 நாட்களால் அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் கடன் சேகரிப்பு சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் பேணிவரப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.3 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் வீடமைப்புக் கடன் வட்டித் தொகையை மீள் நிரப்புமாறு கோரி நிறுவகத்தின் ஊழியர்களால் நிறுவகத்திற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(ஆ) நிறுவகத்தின் உத்தியோகத்தர் ஒருவரால் இழப்பீடு கோரி தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக நிறுவகத்தால் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) 2007 ஆம் ஆண்டிலிருந்து கடன்பட்டோரிடமிருந்து நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 570,257 தொகையை அறவிடுவதற்காக நிறுவகத்தினால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) உற்பத்தி நடவடிக்கைகள்**

கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்து வகைகள் தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | உற்பத்தி செய்யப்பட்ட மருந்து வகைகளின் எண்ணிக்கை | உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை (மில்லியன்) |
|---|---|---|
| 2009 | 38 | 1195.2 |
| 2010 | 38 | 1614.1 |
| 2011 | 37 | 1796.4 |
| 2012 | 40 | 1920.2 |
| 2013 | 40 | 2005.1 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மருந்து அலகுகளின் உற்பத்தி அதிகரிப்பு விகிதம் 2012 ஆம் ஆண்டில் 6.8 சதவீதமாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அது 4.4 சதவீதமாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு விகிதத்தில் 2.4 சதவீதமான குறைவொன்று தென்பட்டது.

(ii) 2012 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 40 வகையான மருந்துகளின் கூட்டுஉற்பத்தி அலகுகளான 1920.2 மில்லியனுடன் மீளாய்வாண்டின் அந்த 40 வகையான மருந்துகளின் கூட்டுமொத்த உற்பத்தி அலகுகளான 2005.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது மருந்துகள் உற்பத்தி 84.9 மில்லியன் அலகுகளால் அதிகரித்திருந்தன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

(iii) மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 40 வகையான மருந்துகளில் 4 மருந்து வகைகளின் மொத்த உற்பத்திக்கான பங்களிப்பு 0.09 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன், மொத்த உற்பத்தியில் 1027.73 மில்லியன் அல்லது 51.24 சதவீதம் 5 மருந்து வகைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(iv) 2005 ஆம் ஆண்டு முதல் 2013 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் ஆராய்ச்சி நிலையில் காணப்பட்ட மருந்து உருப்படிகளின் எண்ணிக்கை 07 ஆகக் காணப்பட்டதுடன் அந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 03 முதல் 08 ஆண்டுகள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ரூபா 1,186,200 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் இம்மருந்துகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு தவறியிருந்தது.

**(ஆ) விற்பனை நடவடிக்கைகள் மற்றும் விலையிடல்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மருந்துகள் விற்பனை தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | மருந்துகள் விற்பனை | | விற்பனைப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 |
| | அலகு மில்லியன் | அலகு மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 13.5 | 492.4 | 9.6 | 412.4 |
| மருத்துவ வழங்கல் பிரிவு | 1507.1 | 1,203.9 | 1,412.1 | 1,000.7 |
| ஏற்றுமதி | - | 3.8 | - | 1.4 |
| ஏனைய விநியோகத்தர் | 478.5 | - | 519.4 | - |
| | 1,999.1 | 1,700.1 | 1941.1 | 1,414.5 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் போது மொத்த விற்பனை அலகு அளவில் 75.39 சதவீதம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதிலிருந்து உழைக்கப்பட்ட விற்பனை வருமானம் மொத்த விற்பனை வருமானத்தில் 72.7 சதவீதமாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது விநியோகத்தர்கள் மார்க்கமாக மருந்துகள் விற்பனை மீண்டும் ஆரம்பித்து 478.5 மில்லியன் மருந்து அலகுகள் 45 விநியோகத்தர்களுக்கு ரூபா 52.8 மில்லியன் கழிவு வழங்கி ரூபா 519.4 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(iii) மொத்த மருந்துகளின் அலகு விற்பனை மற்றும் விற்பனைப் பெறுமதி என்பன முறையே 45.9 சதவீதம் மற்றும் 38.7 சதவீதம், 32 மருந்துகளின் அடிப்படையில் தங்கியிருந்ததுடன், மருந்து அலகுகள் விற்பனையில் 54.1 சதவீதமும் விற்பனைப் பெறுமதியில் 61.3 சதவீதமும் 08 மருந்து வகைகளின் அடிப்படையில் தங்கியிருந்தன.

(iv) மருத்துவ வழங்கல் பிரிவு கட்டளையிட்ட ரூபா 47.27 மில்லியன் பெறுமதியான 5 வகையான மருந்து அலகுகளில் 36.50 மில்லியன் அலகுகள் அந்த உற்பத்தியில் காணப்பட்ட தொழிநுட்ப தவறுகள் மற்றும் உரிய தரத்திற்கு இணங்க மூலப்பொருட்களை வழங்க முடியாமை போன்ற காரணங்களால் மீளாய்வாண்டின் போது வழங்க முடியாதிருந்தது.

(v) 2013 ஆம் ஆண்டின் மொத்த இலாபம் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 208.8 மில்லியன் அல்லது 95.56 சதவீத அதிகரிப்பொன்றும் 2013 ஆம் ஆண்டின் மொத்த இலாப எல்லை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 42.39 சதவீமான அதிகரிப்பொன்றும் காணப்பட்டது.

(vi) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர விநியோகத்தராக இருந்த அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு பதிலாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உட்பட விநியோகத்தர்கள் மூலம் மருந்துகள் விநியோகித்தல் 2013 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த விநியோகத்தர்களுக்கு 23 வகையான மருந்துகளை வழங்கும் போது அவற்றின் விற்பனை விலையை தீர்மானிப்பதற்காக கூட்டுத்தாபனத்தால் எவ்வித சந்தை ஆய்வொன்று அல்லது விலை ஆய்வொன்றையும் மேற்கொள்ளாமல் 15 சதவீதம் என்ற குறைந்த எல்லையுடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்காக 2012 ஆம் ஆண்டின்

போது பயன்படுத்தப்பட்ட விலைகளில் எவ்வித மாற்றமுமின்றி மீளாய்வாண்டிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(vii) கிரயத்தின் மீது 15 சதவீதத்திற்கு குறைந்த இலாப எல்லையுடன் விலை தீர்மானிக்கப்பட்ட Amoxicillin Tab 125mg, Paracitamol Tab, 500mg மற்றும் Amoxicillin Cap 500mg ஆகிய மருந்துகளுக்கும் கூட்டுத்தாபனத்தால் 2013 சனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட உபகாரக் கொடுப்பனவு (Bonus Issues) முறைமைக்காக பயன்படுத்திய காரணத்தால் அம்மருந்துகளின் இலாப எல்லை 8 சதவீதத்திலிருந்து 1 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,307,359 கூட்டுத்தொகையான கிரயத்திலான மருந்துகள், மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள் நிராகரிக்கப்பட்டமை, சேதமடைந்தமை மற்றும் விநியோகிக்காமை போன்ற காரணங்களால் மீளாய்வாண்டின் போது அழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மருந்துகள் உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 13,202,663 கிரயமான மூலப்பொருட்கள் இயந்திரங்கள் மூலம் நிராகரிக்கப்பட்டமை, பொருட் பதிவேடு பிழைகள் காணப்பட்டமை, விபரக் குறிப்புகளுக்கு இணங்காமை, நிறம் மாறுதல் மற்றும் காலாவதியானமை போன்ற காரணங்கள் அடிப்படையில் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) Chloramphenical என்ற பெயரிலான மருந்து உற்பத்தியின் போது காணப்பட்ட தொழில்நுட்ப குறைபாடு காரணமாக உற்பத்தி 2011 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட ரூபா 6,107,917 பெறுமதியான 1,102.7 கிலோ கிராம் Chloramphenical BP 2010 மூலப்பொருள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன. அதில் ரூபா 5,325,210 பெறுமதியான 984 கிலோ கிராம் மூலப்பொருட்கள் 2014 யூலை மாதத்தின் போது காலாவதியாகியிருந்ததுடன், ரூபா 78,287 பெறுமதியான 18.7 கிலோ கிராம் மூலப்பொருட்கள் 2014 மார்ச் மாதத்தில் காலாவதியாகியிருந்தது. உற்பத்தியில் காணப்படும் தொழில்நுட்ப குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன்,

இதனால் மேற்குறித்த 1,002.7 கிலோ கிராம் மூலப்பொருட்களால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 5,403,497 ஆன நிதி நட்டமொன்று ஏற்படும் இடரொன்று காணப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆய்வுகூடத்தை மேம்படுத்தும் செயற்பாட்டிற்கு தேவையான 09 வேலை மேசைகளை வழங்கி பொருத்துவதற்காக 2011 மார்ச் 25 ஆம் திகதி பெறுமதி சேர் வரியுடன் ரூபா 1,365,969 ஆன குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,285,780 முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. குறித்த வேலை மேசைகள் 2013 பெப்ரவரி 19 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆய்வுகூடத்தை தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்திலிருந்த பொருட்களை 2014 ஏப்ரல் மாதம் வரையில் அப்புறப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கப்படாமல் வேலை மேசைகளை வழங்குனரைக் கொண்டே பொருத்திக் கொள்வதற்கு முடியாமல், செலவிடப்பட்ட தொகையினை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமலும் செலுத்திய முற்பணத்தையும் மீள்நிரப்புவதற்கும் முடியாதிருந்தது.

(ஆ) புதிய மாத்திரை உற்பத்தி இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்குரிய ரூபா 8,666,375 தொகை பெறுமதியான செயலாற்றல் பிணை 2013 மார்ச் 26 ஆம் திகதி காலாவதியாகியிருந்த போதிலும், அதன் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பாடமல் இருந்தது. மேலும் போதியளவு கட்டுப்பாட்டு முறைமையொன்று இல்லாமையால் செயலாற்றல் பாதுகாப்பு பிணை காணாமல் போயிருந்தது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 மார்ச் 21 ஆந் திகதிய 35/13 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானம் மற்றும் 2013 பெப்ரவரி 22 ஆம் திகதிய 18/13 மற்றும் 2013 ஒக்தோபர் 23 ஆம் திகதிய 116/13 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானங்களின் பிரகாரம் உற்பத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் மூலப்பொருட்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட / சேதமடைந்த மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களின் கூட்டுத்தொகையான ரூபா 2,724,726 மீளாய்வாண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உதவி முகாமையாளரால் தயாரிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் மற்றும் நிர்வாக செயற்பாட்டுக் கோவையின் சட்டரீதியான குறைபாடுகளை பரீட்சிக்கும் செயற்பாட்டிற்கு விலை விபரங்கள் கோரப்படாமல் உதவி தொழில் ஆணையாளர் ஒருவருக்கு ரூபா 25,000 தொகை 2013 திசெம்பர் 17 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத ரூபா 1,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடன் கூடிய சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நட்டங்கள் சேதமடைந்தமை மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை போன்ற காரணங்களால் ரூபா 18,606,953 கிரயத்திலான உற்பத்தி இயந்திரங்கள், கணனி மற்றும் உபபாகங்கள், தளபாடங்கள், வாயுச்சீராக்கிகள் மற்றும் கைவிரலடையாள இயந்திரங்கள் போன்ற 62 சொத்து உருப்படிகளின் 115 அலகுகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 மார்ச் வரை கூட்டுத்தாபனத்தின் வெவ்வேறு பிரிவுகளில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 5,000 கிரயத்திலான 34 சொத்து உருப்படிகளின் ரூபா 11,501,315 மொத்தக் கிரயத்திலான சேதமடைந்த சொத்துக்கள் திருத்தம் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது அவ்வாறு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாவிடின் 2003 சனவரி 03 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச்

சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் போது பதவிநிலைத் தரத்திற்குரிய 14 பதவிகளுக்கும் பதவிநிலைத் தரமல்லாத 22 பதவிகளுக்குரிய 36 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் சொத்துக்கள் சேதமடைதல் அல்லது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத காரணத்தால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் காணப்படும் சொத்துக்கள் தொடர்பாக அப்பிரிவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 16 அம் திகதி மீண்டும் திருத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு இருக்கையில் பாதிடப்பட்ட 03 செலவினத் தலைப்புகள் தொடர்பில் உள்ளபடியான செலவினங்களில் 25 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக 17 சதவீதம் முதல் 1780 சதவீதம் வரையான வீச்சில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 5.3 வருடாந்த அறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்

2012 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2014 ஆகஸ்ட மாதம் இறுதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பாதீடு
(ஆ) வரி
(இ) மருந்துகளை உற்பத்தி செய்தல் மற்றும் விலையிடல்
(ஈ) கடன்பட்டோர்
(உ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) இருப்புக்கள்
(எ) மனித வள முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# 2013ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய தலைவரின் கருத்துகள்

## 2. நிதியியல் கூற்றுகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கும் இணங்கி ஒழுகாமை

அ. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வரித் தொகையை உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்துக்கு மாற்றுவதற்கான பணிப்புகள் வழங்கப்பட்டன.

ஆ. இந்த வகையான சலுகையை அளிப்பதற்கு முன்னர் நிதி திட்டமிடல் அமைச்சரின் அனுமதி பெறப்படுதல் வேண்டும் என முகாமைத்துவ சுற்றறிக்கை இல. PED 57 விதித்துரைக்கின்ற போதிலும் கூட, இந்நவடிக்கைமுறைக்கு நீண்ட காலம் தேவைப்படுகின்றது. எனினும், இந்த வகையான சலுகைக்கான வேண்டுகோளுக்கு அவசியமான அங்கீகாரம் மிகக் குறுகிய காலத்தினுள் வழங்கப்படவேண்டியிருப்பதால், அதனை மேற்கொள்வதற்கு நாம் ஆரம்பத்தில் எமது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்று அதன் பின்னர் அத்தகைய கோரிக்கையை அங்கீகாரத்துக்காக பணிப்பாளர் சபைக்கும் சமர்ப்பிக்கின்றோம். அதேவேளை, ஊக்குவிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான பணிப்புகள் 2013ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டத்தில் பெறப்பட்டன.

இ. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் உழைக்கும் போதே செலுத்தல் கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கூட்டுத்தாபனத்தின் நிதியில் இருந்து செலுத்தப்படுகின்றது. எனினும், 2014 ஆகஸ்ட் முதல் செயற்படும்படியாக PAYE ஐ ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈ. (i) பந்தி இல. 02-01

(ii) பந்தி இல. 02-01 (1)

அரசாங்க வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் தேவையை ஈடுசெய்வதற்காக, மு.ப. 6.00 மணி முதல் பி.ப. 10.00 மணி வரையும் வேலை முறைமாற்றல் திட்டம் ஒன்று நடைமுறைப்பட்டுள்ளது. உற்பத்திப் பொறி பொதுப் போக்குவரத்து வசதிகள் அற்ற ஓர் இடத்தில் அமையப்பெற்றுள்ளது. எனவே, முறைமாற்றல் அடிப்படையில் பணி புரிவதற்கு உரிய நேரத்தில் கடமைக்கு ஊழியர்களை வரவழைத்தல் அத்தியாவசியமான ஒரு விடயமாகும். இவ்விடயத்தில், கூட்டுத்தாபனத்துக்கு அண்மையில் வசிக்கும் ஊழியர்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றனர். இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு, வசிக்கும் இடத்திற்கான தூரத்தைக் கவனத்தில் கொள்ளாது போக்குவரத்துப்படி ஒன்று எல்லா பணியாளர்களுக்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வழங்கப்படுகின்றது.

(iii) பந்தி இல. 02-02

உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவின் அதிகரிப்பைத் தொடர்ந்து உற்பத்தி கணிசமான அளவு உயர்ந்துள்ளது. எவ்விதமான பொறிகளையும் அறிமுகப்படுத்தாமலே 2011ஆம் ஆண்டில் இருந்து உற்பத்தி அதிகரித்துள்ளது.

## 3. நிதியியல் மீளாய்வு

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதியியல் மீளாய்வு

அ. இவ்விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

ஆ. இவ்விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

இ. மேலதிக செயற்படு மூலதனத்தை பயனுறுதியாகப் பயன்படுத்துவதற்கான முதலீட்டுத் திட்டங்கள் 2015ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

ஈ. எமது நிறுவனம் மருத்துவ வழங்கல் பிரிவில் நிலுவையாக உள்ள பணத்தை திறைசேரியின் ஊடாகப் பெற்றுக்கொள்கின்றது. நாம் எப்போதும் பணத்தை முடியுமானவரை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

### 3.3 நிறுவனத்துக்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் தொடுக்கப்பட்ட வழக்குகள்

அ. இந்த வழக்கு தற்போது கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றது. எனினும், முறைப்பாட்டை மேற்கொண்டவர்கள் இந்த வழக்கைத் தொடர்வதில் அக்கறையுடன் செயற்படுவதாகத் தென்படவில்லை.

ஆ. இந்த வழக்கில் கூட்டுத்தாபனம் வெற்றி பெற்றதுடன் முடிவடைந்தது.

இ. பெறவேண்டிய இந்த கடனாளி நிச்சயமற்றவர் என்பதால், அதற்கான ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றம்

### அ. உற்பத்திச் செயற்பாடுகள்

i. தொழிற்சாலையின் உற்பத்தி உச்ச மட்டத்தை அடைந்துள்ளதால், உற்பத்தி வளர்ச்சி வீதம் குறைவடைந்து செல்கின்றது. வீதம் குறைவடைந்தபோதிலும், உற்பத்தியின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு அதிகரிப்பைக் காட்டுகின்றது.

ii. சந்தையில் நிலவும் கேள்வியின் அடிப்படையில் வழங்கப்படும் கட்டளைகளுக்கு மாத்திரமே நாம் உற்பத்தி செய்கின்றோம்.

iii. சில உற்பத்திகள் சந்தையில் நிலவும் கேள்வியின் அடிப்படையில் வழங்கப்படும் கட்டளைகளின் பிரகாரம் உற்பத்தி செய்யப்படுகின்றன. சில மருந்துப்பொருட்கள் அதிகரித்த கேள்வியைக் கொண்டுள்ள அதேவேளை, வேறு சில மருந்துப் பொருட்களுக்கு கேள்வி குறைவாக உள்ளது. இந்த விடயத்தின் அடிப்படையில் தான் உற்பத்திக் கலவை நிர்ணயிக்கப்படுகின்றது.

iv. மருந்துப் பொருட்களின் பிரதான மூலப்பொருட்களினதும் ஏனையவற்றினதும் தாக்கம் மற்றும் உறுதிப்பாடு, அவ்வாறே அதற்கு மிகவும் பொருத்தமான உற்பத்தி நடைமுறை ஆகியவை தொடர்பாக மிகவும் கவனமாக பகுப்பாய்வு மேற்கொள்ளவேண்டியிருப்பதால், புதிய மருந்துப் பொருட்களின் வடிவமைப்புக்கு சுமார் ஐந்து வருடங்கள் தேவைப்படுகின்றது. முறைமையான பகுப்பாய்வு முறை இல்லாதவிடத்து, இதற்கு எடுக்கும் காலம் மேலும் அதிகமானதாகும்.

### (ஆ) சந்தைப்படுத்தலும் விலையிடலும்

i. மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்குவதை விட வேறுபட்ட போட்டித்தன்மையான சுற்றாடலில் திறந்த சந்தையில் சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே, திறந்த சந்தையில் உள்ள ஏனைய போட்டியாளர்களுடன் போட்டியிட்டு எமது வினியோகத்தர்கள் ஊடாக மருந்துப் பொருட்களை விற்பனை செய்வதில் விற்பனை ஊக்குவிப்பு உபாயமாக ஒரு கழிவு முறைமை பயன்படுத்தப்படுகின்றது. எனினும், நாம் விலைகளை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு முயற்சிக்கின்றோம்.

ii. 2013ஆம் ஆண்டில் உயர்ந்த கேள்வியைப் பெற்ற (குறிப்பாக அரச துறைகளில் நிலவும் கேள்வி) மருந்துப் பொருட்களை மையமாகக் கொண்டு உற்பத்திச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டன.

iii. சம்பந்தப்பட்ட பொருட்களை தொழில்நுட்பக் குறைபாடு காரணமாக வழங்குதல் சாத்தியப்படவில்லை.

iv. சந்தை விலைகள் பற்றிய ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. விலைகளைக் குறைக்கக்கூடிய மருந்துப் பொருட்களின் விலைகள் அதன் பிரகாரம் வினியோகத்தின் போது குறைக்கப்பட்டன.

v. மிகை ஊதியங்கள் விற்பனை ஊக்குவிப்பு உபாயமாக வழங்கப்படுவதுடன் பல பொருட்களில் இலாப எல்லை நியாயமான காரணங்களினால் ஓரளவு குறைவடைந்தன. அதேவேளையில், விலை குறைப்பின் காரணமாக கேள்வி குறைவடைகின்றபோது, எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் கிடைக்கும்.

vi. அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் (SPC) எம்மிடம் போதியளவு கொள்வனவுக் கட்டளைகளை வழங்கவில்லை. எமது கூட்டுத்தாபனம் 2013ஆம் ஆண்டில் வினியோகத்தர்கள் ஊடாக விற்பனைச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. ஆகவே, சந்தையில் நிலவும் விலைகள் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த ஆய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. சில மருந்துப் பொருட்களின் சந்தைப் பங்கை இழக்கும் சாத்தியம் காணப்பட்டதால், அவற்றின் விலைகள் மாற்றப்படவில்லை.

vii. ஊக்குவிப்பு உபாயமாக தெரிவு செய்யப்பட்ட சில மருந்துப் பொருட்கள் தொடர்பாக வெகுமதிகள் வழங்கப்பட்டதுடன் கணக்காய்வு விசாரணையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு இலாப எல்லை குறைவடைந்தபோதிலும், இதற்கான காரணங்கள் கணக்காய்வுக்காக வழங்கப்பட்டன.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறன் இல்லாமை

அ. உற்பத்திகள் நிராகரிக்கப்பட்ட, காலாவதியான மற்றும் சேதமடைந்த காரணத்தினால், நிர்வாகப் பிரிவு, வடிவமைப்பு அபிவிருத்திப் பிரிவு மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றின் முழுமையான அங்கீகாரத்துடன் இந்தப் பெறுமதியுள்ள உற்பத்திகள் அழிக்கப்பட்டன. இவை பழைய இலச்சினையைக் கொண்ட விபரச்சிட்டை (லேபல்கள்), இயந்திரங்களினால் நிராகரிக்கப்பட்ட கூட்டுக் குளிகைகள், பழுதடைந்த மூலப்பொருட்கள் போன்றவையாகும்.

4.3 வடிவமைப்பில் தொழில்நுட்ப குறைபாடுகள், காலாவதியாதல் மற்றும் மிகக்குறைந்த அளவில் பயன்படுத்தப்படுதல் ஆகிய காரணங்களினால், கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களில் சில பயன்படுத்தப்படவில்லை.

4.4 பிரச்சினைகளைத் தீர்த்து, தற்போதுள்ள வழுக்களை நிவர்த்தித்து உற்பத்தியை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.3 தொழிற்பாட்டு வினைத்திறன் இல்லாமை

அ. குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் புதிய கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளில் தாமதம் காரணமாக சீர்குலைந்தன. இறுதியாக, எஞ்சிய வேலைகள் எமது கூட்டுத்தாபனத்தினால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து, தலைவருக்கும் பொது முகாமையாளருக்கும் ஒதுக்கப்பட்ட இடத்தையும் மாநாட்டு மண்டபத்தை ஆய்வுகூடமாகவும் பயன்படுத்துவதற்கு முடியுமாக இருக்கும்.

ஆ. சம்பந்தப்பட்ட செயலாற்ற உத்தரவாதம் பெறப்பட்டுள்ளதுடன் கூட்டுத்தாபனத்துக்கு எவ்வித நட்டமும் ஏற்படாதவாறு சம்பந்தப்பட்ட வங்கிக் கட்டணங்களை வட்டியுடன் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அ. உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மற்றும் பயன்பாட்டுக்குப் பொருத்தமற்ற நிராகரிக்கப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் சாதனங்கள் ஆகியவை பற்றிய ஓர் அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட தொகை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இலாபத்திலிருந்து பதிவழிக்கப்பட்டது.

ஆ. அத்தகைய செயற்பாடுகள் உயர்ந்த தரத்தைக் கொண்டுள்ளதாக இருக்கவேண்டும் என்பதால், உயர் தொழில்சார் தகைமைகளைக் கொண்ட ஒருவரால் சேவையின் தரத்தை மதிப்பிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.5 செயலாற்றம் அற்ற மற்றும் குறைபயன்பாட்டைக் கொண்ட சொத்துகள்

அ. சம்பந்தப்பட்ட சொத்துகள் தொடர்பாக தொகை மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கான ஒரு சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆ. இந்தச் சொத்துகள் தொடர்பாகவும் அரச நிதிச் சுற்றறிக்கை 353 (5)இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க, தொகை மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கான ஒரு சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.6 பணியாளர் நிர்வாகம்

இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

## 5. வகைப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 5.2 வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு

சொல்லப்பட்ட விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிப்பதில் கவனத்தில் கொள்ளப்படும்.

### 5.3 ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

ஆண்டறிக்கைகள் சுகாதார அமைச்சினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. 2012ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை 2014 மார்ச் 03ஆம் திகதி சுகாதார அமைச்சுக்கு கையளிக்கப்பட்டு அமைச்சு அதனை 2014 செப்டம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றச் செயலகத்துக்கு அனுப்பிவைத்துள்ளது.

## வரைபட மீள்நோக்கு

### மனித வளங்கள்

| ஆண்டு | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| 2004 | 155 |
| 2005 | 148 |
| 2006 | 171 |
| 2007 | 189 |
| 2008 | 195 |
| 2009 | 209 |
| 2010 | 209 |
| 2011 | 208 |
| 2012 | 199 |
| 2013 | 211 |

### ஊழியர் எண்ணிக்கை




### உற்பத்தி

| ஆண்டு | குளிகைகள்/கூட்டுக் குளிகைகள் எண்ணிக்கை |
|---|---|
| 2004 | 724 |
| 2005 | 837 |
| 2006 | 752 |
| 2007 | 1025 |
| 2008 | 1032 |
| 2009 | 1195 |
| 2010 | 1623 |
| 2011 | 1796 |
| 2012 | 1922 |
| 2013 | 2003 |

### உற்பத்தி வெளியீடு




### உற்பத்தியின் பிரதான பங்களிப்புகள் - 2013

| குளிகைகள்/கூட்டுக் குளிகைகள் (மில்லியன்) | |
|---|---|
| போலிக் அசிட் குளி பீபி 1மிகி | 265.5 |
| அமொக்சிசிலின் கூ.குளிகை 250மிகி | 235.234 |
| பரசிடமோல் குளிகைகள் பீபி 500மிகி | 224 |
| குளொக்சசிலின் கூ. குளிகைகள் BP 250மிகி | 206.4 |
| சல்பியுடமோல் குளிகைகள் பீபி | 103.6 |
| சல்பியுடமோல் குளிகைகள் பீபி 2மிகி | 91.2 |
| டிக்ளோபெனெக் குளிகைகள் பீபி 50மிகி | 88.4 |
| மெற்போமின் குளிகைகள் பீபி 500மிகி | 85.99 |
| பெமோரிடைன் குளிகைகள் பீபி 20மிகி | 71.55 |
| விற்றமின் பீ சீஎச்எப் குளிகைகள் | 61.6 |

### உற்பத்தியின் பிரதான பங்களிப்புகள்



### தரக்கட்டுப்பாடு

செயலாற்றத்தின் பகுப்பாய்வு - 2013

**செயலாற்றம்**

| | எண்ணிக்கை |
|---|---|
| முடிவடைந்த உற்பத்திகள் | 2365 |
| அனுப்புவதற்கு முந்திய மூலப்பொருட்கள் | 39 |
| மூலப்பொருள் மாதிரிகள் | 462 |
| கேள்விப்பத்திர மதிரிகள் | 183 |
| எப்.டீ வடிவமைப்புப் பரிசோதனை | 81 |
| நீர் மாதிரிகள் | 30 |
| பொதியிடல் சாதனங்கள் | 114 |
| உறுதிப்படுத்தல் மாதிரிகள் | 49 |
| சுற்றாடல் துப்புரவு | 12 |
| உற்பத்திக்கு முந்திய நிலை | 90 |
| பொதியிடலுக்கு முன் சாதனங்கள் | 101 |
| மீள்உறுதிப்படுத்தல் உற்பத்திகள் | 14 |
| மொத்தம் | 3540 |

**செயலாற்றப் பகுப்பாய்வு 2013**




**பராமரிப்பு**

| ஆண்டு | மின்வலுப் பயன்பாடு |
|---|---|
| 2004 | 1,108,150 |
| 2005 | 1,142,690 |
| 2006 | 1,069,013 |
| 2007 | 1,446,112 |
| 2008 | 1,550,285 |
| 2009 | 1,616,464 |
| 2010 | 1,775,660 |
| 2011 | 2,096,330 |
| 2012 | 2,159,566 |
| 2013 | 2,268,250 |

**மின்வலு பயன்பாடு**




**விற்பனை**

**Turnover Segement (Rs. Million)**

| | **2013** | **%** |
|---|---|---|
| சு.சே.தி. | 1,412.13 | 72.75 |
| அ.ம.கூ | 9.60 | 0.49 |
| விநியோகம் | 519.34 | 26.76 |
| ஏற்றுமதி | - | - |
| மொத்தம் | 1,941.07 | 100.00 |

| | **2012** | **%** |
|---|---|---|
| சு.சே.தி. | 1,000.20 | 70.73 |
| அ.ம.கூ | 412.40 | 29.17 |
| விநியோகம் | - | - |
| ஏற்றுமதி | 1.42 | 0.10 |
| மொத்தம் | 1,414.02 | 100.00 |

**2012**




**2013**



**புரள்வு (2004 - 2013)**

| ஆண்டு | புரள்வு ரூபா (மில்) |
|---|---|
| 2004 | 363.4 |
| 2005 | 387.69 |
| 2006 | 411.19 |
| 2007 | 599.03 |
| 2008 | 890.24 |
| 2009 | 1152.68 |
| 2010 | 1379.65 |
| 2011 | 1431.65 |
| 2012 | 1414.54 |
| 2013 | 1941.18 |
| **Total** | **3540** |




நிதி

தேறிய இலாபம்/ (நட்டம்)

| ஆண்டு | தேறிய இலாபம்/நட்டம் ரூபா (மில்லியன்) |
|---|---|
| 2004 | 10.69 |
| 2005 | 14.71 |
| 2006 | 8.08 |
| 2007 | 77.33 |
| 2008 | 120.57 |
| 2009 | 151.82 |
| 2010 | 292.31 |
| 2011 | 244.79 |
| 2012 | 117.13 |
| 2013 | 329.96 |



# கடந்த பத்து ஆண்டுகளில் நிலவிய நிதி தொடர்பான முக்கிய தகவல்கள்

(ரூபா.000)

| | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பணப்புரள்வு | 363,402 | 387,696 | 411,194 | 599,035 | 890,244 | 1,152,684 | 1,379,652 | 1,431,655 | 1,414,546 | 1,941,182 |
| விற்பனைச் செலவு | 321,990 | 328,536 | 371,315 | 500,444 | 765,247 | 932,212 | 1,030,545 | 1,130,961 | 1,220,523 | 1,513,899 |
| மொத்த இலாபம் | 41,412 | 59,159 | 39,878 | 98,590 | 124,997 | 220,472 | 349,107 | 300,693 | 194,023 | 427,283 |
| தொழிற்பாட்டு இலாபம் | (11,379) | (5,398) | (20,469) | 37,141 | 63,403 | 121,423 | 266,166 | 218,593 | 85,292 | 304,176 |
| நிர்வாகச் செலவு | 34,949 | 39,719 | 41,939 | 53,947 | 47,162 | 60,243 | 62,869 | 73,062 | 82,390 | 106,096 |
| வட்டி வருமானம் | 22,005 | 20,111 | 30,282 | 41,462 | 60,904 | 33,479 | 30,752 | 23,067 | 31,843 | 25,314 |
| தேறிய இலாபம் | 10,692 | 14,713 | 8,087 | 77,339 | 120,572 | 151,827 | 292,317 | 244,792 | 117,136 | 329,968 |
| நிலையான சொத்துகள் | 461,945 | 547,919 | 429,144 | 421,085 | 408,129 | 815,342 | 914,716 | 855,660 | 804,305 | 762,641 |
| குறுகிய கால முதலீடு | 228,236 | 250,812 | 296,905 | 281,107 | 265,893 | 201,529 | 243,264 | 337,229 | 210,691 | 429,896 |
| மொத்த சொத்துகள் | 1,046,765 | 1,056,501 | 1,076,470 | 1,117,587 | 1,251,026 | 1,718,461 | 1,887,430 | 1,933,205 | 2,003,258 | 2,294,113 |
| ஊழியர் எண்ணிக்கை | 155 | 148 | 171 | 189 | 195 | 209 | 209 | 208 | 199 | 211 |

மொத்த சொத்துகள் = மொத்த நடைமுறையற்ற சொத்துகளின் தேறிய புத்தகப் பெறுமதி + மொத்த நடைமுறைச் சொத்துகள்









**ලියාපදිංචි කාර්යාලය**

11, සර් ජෝන් කොතලාවල මාවත,
කඳවල වත්ත,
රත්මලාන.

දුරː 2635353, 2637574, 2636967 (ADSL)
පැක්ස් : 2634771, 2626621
වි - තැපැල :spmclanka@sltnet.lk
වෙබ් අඩවිය :www.spmclanka.lk

**සභාපති**
දුර : 2623238 (සෘජු)
2635353, 2637574 (පොදු)

**සාමාන්‍යාධිකාරී**
දුර : 3153835 (සෘජු)
2635353, 2637574 (පොදු)

**නිෂ්පාදන දෙපාර්තමේන්තුව**
නිෂ්පාදන කළමනාකරු
දුර : 2623521 (සෘජු)

**සැළසුම් හා ප්‍රසම්පාදන දෙපාර්තමේන්තුව**
**සැළසුම් හා ප්‍රසම්පාදන කළමනාකරු**
දුරː 2623298 (සෘජු)

**අලෙවි දෙපාර්තමේන්තුව**
**සහකාර අලෙවි කළමනාකාරිණී**
දුර : 3163308 (සෘජු)

**තත්ව පාලන දෙපාර්තමේන්තුව**
**තත්ව පාලන කළමනාකරු**
දුර : 5512945 (සෘජු)

**වට්ටෝරු, පර්යේෂණ හා සංවර්ධන දෙපාර්තමේන්තුව**
**වට්ටෝරු, පර්යේෂණ හා සංවර්ධන කළමනාකාරිණී**
දුර : 5512950 (සෘජු)

**මූල්‍ය දෙපාර්තමේන්තුව**
**කළමනාකරන ගණකාධිකාරී**
දුර : 2626630 (සෘජු)

**කර්මාන්තශාලා ගණකාධිකාරී**
දුර : 2623276 (සෘජු)

**නඩත්තු දෙපාර්තමේන්තුව**
**නඩත්තු කළමනාකරු**
දුර : 2623246 (සෘජු)

**සහකාර නඩත්තු කළමනාකරු**
දුර : 2623239 (සෘජු)

**අභ්‍යන්තර විගණක දෙපාර්තමේන්තුව**
**අභ්‍යන්තර විගණක**

දුර : 2626619 (සෘජු)

**මානව සම්පත් දෙපාර්තමේන්තුව**
**සහකාර මානව සම්පත් කළමනාකාරිණී**

දුර : 2623553 (සෘජු)

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்**

11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,
கந்தவெல எஸ்ரேட்,
இரத்மலானை

தொ.பே.: 2635353, 2637574, 2636966, 2636967(யுனுளுடு)
தொலைநகல் : 2634771 இ2626621
மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk
வலையமைப்பு : www.spmclanka.lk

***தலைவர்***

தொ.பே. : 2623238 ( நேரடி )
2635353, 2637574 ( பொது )
0777 –892525 ( கையடக்கத் தொலைபேசி )

***பொது முகாமையாளர்***
தொ.பே : 060 –2153853 ( நேரடி)
2635353, 2637574 (பொது )

***உற்பத்தித் திணைக்களம்***

**உற்பத்தி முகாமையாளர்**
தொ.பே : 2623521 ( நேரடி)

***திட்டமிடல், கொள்வனவு, சந்தைப்படுத்தல்***

**திட்டமிடல், கொள்வனவு முகாமையாளர்**
தொ.பே : 2623298 ( நேரடி )

**உதவி சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
தொ.பே :3163308( நேரடி)

***தரக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்***

**தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர்**
தொ.பே : 5512945 ( நேரடி)

***உருவாக்கல், ஆய்வு, அபிவிருத்தித் திணைக்களம்***

**உருவாக்கல், ஆய்வு, அபிவிருத்தி முகாமையாளர்**
தொ.பே : 5512950 ( நேரடி)

***நிதித்திணைக்களம்***

**முகாமைத்துவக் கணக்காளர்**
தொ.பே : 2626630 ( நேரடி)

**தொழிற்சாலைக் கணக்காளர்**
தொ.பே : 2623276 ( நேரடி )

***பராமரிப்புத் திணைக்களம்.***

**பராமரிப்பு முகாமையாளர்**
தொ.பே : 2623246 ( நேரடி )

**உதவிப் பராமரிப்பு முகாமையாளர்**
தொ.பே : 2623239 ( நேரடி)

***உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்***

**உள்ளகக் கணக்காய்வாளர்**

தொ.பே : 2626619 ( நேரடி )

***நிர்வாகத் திணைக்களம்***

**நிர்வாக அலுவலர்**
தொ.பே : 2623553 ( நேரடி)

**Registered Office**

11,Sir John Kotelawala Mawatha,
Kandawala Estate,
Rathmalana.

Tel: 2635353 , 2637574 , 2636966 , 2636967(ADSL)
Fax : 2634771,2626621
email : spmclanka@sltnet.lk
Web : www.spmclanka.lk

**Chairman**
Tel : 2623238 ( Direct )
2635353, 2637574 (General)

**General Manager**
Tel : 3153835 (Direct)
2635353, 2637574 (General)

**Production Dept.**
**Production Manager**
Tel : 2623521 (Direct)

**Planning & Procurement Dept.**
**Planning & Procurement Manager**
Tel : 2623298 (Direct)

**Marketing Dept.**
**Assistant Marketing Manager**
Tel : 3163308 (Direct)

**Quality Control Dept.**
**Quality Control Manager**
Tel : 5512945 (Direct)

**Formulation, Research & Development Dept.**
**Formulation, Research & Development Manager**
Tel : 5512950 (Direct)

**Finance Dept.**
**Management Accountant**
Tel : 2626630 (Direct)

**Factory Accountant**
Tel : 2623276 (Direct)

**Maintenance Dept.**
**Maintenance Manager**
Tel : 2623246 (Direct)

**Assistant Maintenance Manager**
Tel : 2623239 (Direct)

**Internal Audit Dept.**
**Internal Auditor**
Tel : 2626619 (Direct)

**Human Resources Dept.**
**Assistant Human Resources Manager**
Tel : 2623553 (Direct)

SPMC

www.spmclanka.lk

Design and Printed by M.D.GUNASENA AND COMPANY PRINTERS (PRIVATE) LIMITED